நீதி நெறி விளக்கம்

மூலமும் உரையும்

உரையாசிரியர்

சித்தாந்த செம்மணி
முனைவர் **பழ. முத்தப்பன்**

உமா பதிப்பகம்
18/171, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 044 - 25215363

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் கற்பனை வளத்தோடு அறக்கோட்பாடுகளைத் தரும் களஞ்சியமாக விளங்குவனவாகும். தமிழ் இலக்கியங்களில் முதன்மை இலக்கிய மான சங்க அக, புற இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள் ஊடுபொருளாக கூறப் பெற்றுள்ளன. அவ்அறக் கோட்பாடுகள் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளை அறியப் பயன்படுகின்றன. குறிப்பிட்டுச் சொன்னால் சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வு அறமாகும், அறமே வாழ்வாகும் என்பதை வெளிப்படுத்தும் சான்றுகளாகக் கொள்ளலாம்.

கடைச்சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய சங்கம் மருவிய காலத்துத் தமிழ் இலக்கியங்களும், சங்க இலக்கியங்களைப் போலக் களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தமிழர்களின் வாழ்வியல் இழிநிலையை மாற்ற அறங்களைப் பெரிதும் வலியுறுத்தின. பதிணென்$ழ்க்கணக்கு நூல்கள் தோன்றலாயின. ஆறாம் நூற்றாண்டி ற்குப் பிறகு தமிழகத்தின் இருண்ட காலமாகிய களப்பிரர் காலம் மாறி, பல்லவ, பாண்டியர்களின் ஆட்சி ஏற்பட்ட காலங்களில் பக்தி இலக்கியங்கள் தோன்றி அறச்செய்திகளை வலியுறுத்தின. கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டுவரை பக்தி இலக்கியங்கள் உன்னத நிலையில் இருந்து, பக்தியோடு வாழ்வியல் அறங்களையும் போதித்தன. இந்நூற்றாண்டில் பிற்கால இலக்கிய வளர்ச்சியாக நீதிஇலக்கியங்களின் தோற்றம் அமைந்தது.

கி.பி.பனிரெண்டாம் நூற்றாண்டில் அற இலக்கியங்கள் நீதி இலக்கியமாக மறுவடிவம் கொண்டன. அதனைத் தொடங்கி வைத்தவர் பனிரெண்டாம் நூற்றா ண்டு ஔவையார் ஆவார். அவரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய நூல்கள் நீதி இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றன. பதிமூன் றாம் நூற்றாண்டில் முனைப்பாடியார் பாடிய அறநெறிச் சாரம் நீதிநூல் வரிசையில் தனியிடம் பெற்றுத் திகழ்ந்தது. பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் நீதிக்கருத்து களை வலியுறுத்தும் சதக நூல்கள் தோன்றலாயின. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய நீதி இலக்கியங்களில் நறுந்தொகை சிறந்த நூலாக வலம் வந்தது. இத்தகைய சூழலில் பதினேழாம் நூற்றாண்டில் குமரகுருபரின் நீதிநெறி விளக்கம் தோன்றியது. சிற்றிலக்கியத் தந்தையாக விளங்கிய குமரகுருபரர் பாடிய நீதிநெறி விளக்கம் 101 நேரிசை வெண்பாக்களைக் கொண்டு விளங்குகிறது. நூல் முழுவதும் வாழ்வில் ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டிய நீதிக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இக்காலச் சூழலில் அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர்க்கு நீதி போதனை மிக இன்றியமையாததாகும். அதற்குத் திருக்குறளை அடுத்து அறத்தைப் போதிக்கும் நீதிநெறி விளக்கம் மிகவும் தேவைப்படுவதாகும். இளையதலை முறையில் நீதிநெறி விளக்கத்தைப் பயில வைக்க வேண்டிய கடப்பாடு இன்றைய மூத்தோர்களுக்கு உரியதாகும். அந்த அடிப்படையில் தனிநூலாக எளிய உரையுடன் இந்நூல் வெளிவருகிறது.

நூல் அமைப்பு

குமரகுருபரின் நீதிநெறி விளக்கம் காப்புச் செய்யுள் உட்பட 101 நேரிசை வெண்பாக்களைக் கொண்டது. பெரும்பாலும் தனித்தனிப் பொருள் கொண்ட பாடல்களாகவே அமைந்துள்ளது. தலைப்புகள் இடப்படாமல் தொடர்ந்து பாடல்கள் அமைந்துள்ளன. பிற்காலப் பதிப்பாளர்கள் ஒவ்வொரு வெண்பாவிற்கும் தலைப்பினை இட்டுப் பதிப்பித்துள்ளனர். உ.வே.சாமிநாதைய்யர் பதிப்பித்த திருப்பனந்தாள் திருமட வெளியீட்டில் தலைப்புகள் இல்லை. கல்வியின் சிறப்பில் தொடங்கி அரசாட்சியின் சிறப்பு, அமைச்சரின் கடமை, முயற்சியுடைமை, நட்பு, சொல்வன்மை, பிறன்மனை நயவாமை, குழந்தை நலம், கற்பற்ற பெண்களின் நிலை, தவம், துறவியரின் பண்பாடு ஆகியவை பாடல்கள் மூலம் அறிவுறுத்தப் பெறுகின்றன.

அரசாளும் மன்னவன் மக்களுக்குத் தெய்வமாவான் (பா.27) என்பதும், ஒருசெயலைச் செய்கின்றவர் அச்செயலில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் (பா. 53) என்பதும், வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டியவை மனம், மொழி, செயல், உடல் இவற்றின் தூய்மை (பா. 60) என்பதும், தெய்வ நம்பிக்கை உடையார் தீயவழியில் செல்லின் தெய்வம் தண்டித்துத் திருத்தும் (பா. 74) என்பதும், காமம் தான் அனைத்துக் குற்றங்களுக்கும் காரணம் (பா. 79) என்பதும் உள்ளிட்ட அறங்கள் நூலில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

குமரகுருபரர் இலக்கிய நலம் படைத்தவர் என்பதை ஒவ்வொரு பாடலிலும் காணமுடியும் என்றாலும், அவர் கையாண்டுள்ள உவமைகள் அவரின் இலக்கியப் புலமையை வெளிப்படுத்துவனவாகும். “பொன்மலர் நாற்றமுடைத்து", (பா. 5) என்பதும், “தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்” (பா. 19) என்பதும், "மாபறவை புல்லுரு அஞ்சுவபோல்"' (பா. 23) என்பதும், "மறலி உயிர் குடித்த கால் முளையே போலும்” (பா. 51) என்பதும் போன்ற உவமைகள் அமைந்த பாடல்கள் படித்து இன்புறத் தக்கன ஆகும்.


குமரகுருபரர் தமிழ் உணர்வு மிக்கவர் என்பதையும் அவர் தம் பாடல்கள் கொண்டு அறியமுடிறெது. “மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்" (பா. 7) என்ற தொடர் மூலம் அழிந்து போகும் வெற்றுடம்பைப் படைக்கின்ற நான்முகன் புலவர்கள் படைத்த அழியாத தமிழ்ப் பாக்களுக்கு ஒப்பாக மாட்டான் என்று கூறுகின்ற குமரகுருபரின் தமிழுணர்வு போற்றத் தக்கதாகும்.

இவ்வாறு வாழ்க்கைக்கு வேண்டிய நீதிகளை இலக்கிய வளத்தோடும் தமிழ் உணர்வோடும் நீதிநெறி விளக்கமாகக் குமரகுருபரர் அளித்திருப்பதை நாளும் பயின்று வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய நீதி நூலைப் பதிப்பிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த உமா பதிப்பக நிறுவனர் அன்புச் சகோதரர், எம்மை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் திரு. இராம. லெட்சுமணன் அவர்களுக்கு என்றும் நன்றி உரியதாகும். உடன் இருந்து கணிணி வடிவத்தில் என் எழுத்துக்களை வடித்துத் தரும் என் துணைவியார்

திருமதி. மு. அழகம்மையும், எழுத்துப் பணிக்கு உறுதுணை புரியும் என்னரும் செல்வன் முனைவர். மு. பழநியப்பனும் (தமிழ்த்துறைத் தலைவர், அரசு கல்லூரி, திருவாடானை) பாராட்டுதலுக்கு உரியவர் ஆவர். இவ் எளிய உரையைத் தமிழுலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- பழ. முத்தப்பன்

6. அன்னை சாரதா நகர்,
சோமரசம்பேட்டை,
கைபேசி - 9443765027.
திருச்சி - 102.



குமரகுருபரர் வரலாறு

நீதிநெறி விளக்கம் நூலின் ஆசிரியர் குமரகுருபரர் ஆவார். இவர் தாமிரபரணி நதியின் வடகரையில் அமைந்துள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற தலத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீகைலாசம் என்ற பகுதியில் வாழ்ந்து வந்த சைவவேளாளர் குலத்தைச் சார்ந்த சண்முகசிகாமணிக் கவிராயர் என்பவருக்கும் சிவகாம சுந்தரி என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர். பிறந்து ஐந்து வயது வரை குமரகுருபரர் ஊமையராய் இருந் தார்.

அதுகண்டு வருந்திய பெற்றோர்கள் தங்கள் குழந்தையைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று, செந்திலாண்டவர் சந்நிதியில் கிடத்தி, முருகனை வழிபட்டு வந்தார்கள். திருமுருகன் திருவருளால் ஊமையராய் இருந்த குமரகுருபரர் பேசும் ஆற்றலைப் பெற்றார். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். திருச்செந்தூர்ப் பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலைப் பெற்ற குமரகுருபரர் வத்திலேயே திருச்செந்தூர் முருகன் மீது முதன்முதலில் கந்தர் கலிவெண்பா என்ற பிரபந்தத் தைப் பாடினார். பின் தம் ஊரில் எழுந்தருளியுள்ள கைலாசநாதர் மீது கைலக்கலம் பகம் பாடினார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த பயிற்சி பெற்ற குமரகுருபரர், சிவஞான சாத்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். அவரிடத்தே ஆன்மீக உணர் வும் குடிகொண்டது. பல சிவத்தலங்களுக்கும் சென்று சிவதரிசனம் செய்யும் வழக்க த்தை மேற்கொண்டார். அவ்வாறு ஒருமுறை மதுரையில் சென்று சொக்கநாதர்

மீனாட்சியம்மையை வழிபட்டு, மீனாட்சியம்மையின் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். அக்காலத்தில் மதுரையை நகரை அரசாண்ட திருமலை நாயக்கர் முன்னிலையில் நூலை அரங்கேற்றினார். அவ்வாறு அரங்கேற்றும் பொழுது, மீனாட்சி அம்பிகையே குழந்தையாக வடிவெடுத்து வந்து, குமரகுருபரர் முத்தப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்த பொழுது, தம் கழுத்தில் இருந்த முத்துமாலை ஒன்றைக் குமரகுருபர ருக்கு அணிவித்துச் சென்றார் என்று கூறப்படுகிறது. மன்னரும் அவருக்குப் பலவிதச் சிறப்புகளைச் செய்தார். பின்னர் மதுரைக் கலம்பகம் என்னும் சிற்றிலக்கி யத்தை இயற்றினார்.

பின் திருவாரூக்குச் சென்றார். அங்கு திருவாரூர் நான்மணி மாலை என்ற பிரபந்தத்தை இயற்றினார். இறைவன் மீது கொண்ட அளவற்ற பக்தியினால் சிவஞான உபதேசம் பெற வேண்டும் என்ற வேட்கை குமரகுருபரருக்கு எழுந்தது. அதனால் தக்க ஞானாசிரியரைத் தேடினார். அப்பொழுது திருக்கயிலாயப் பரம்பரை தருமபுர ஆதீனத்தில் நான்காவது பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீமாசிலா மணி தேசிகர் சிவஞானச் செல்வராக விளங்குவது அறிந்து அவர்பால் சென்றார். அவரை வணங்கித் தமக்கு ஞானஉபதேசம் செய்யக் கேட்டுக் கொண்டார். அத்துடன் துறவு நிலையையும் வேண்டினார். துறவுநிலை பெற வேண்டுமானால் ஆதீனத்தின் மரபுப்படி ஒருவர் காசியாத்திரை செய்துவர வேண்டும் என்பதால், தருமை ஆதீனப் பெருமான் குமரகுருபரரைக் காசிக்குத் தலயாத்திரை சென்றுவரைப் பணித்தார்.

காசிக்குச் செல்லக் காலம் கடக்குமே என்று வருந்திய குமரகுருபரரை ஆதீன க்குரவர் சிதம்பரம் வரை சென்றுவரப் பணித்தார். அவர் கட்டளையை ஏற்றுக் குமரகுருபரர் சிதம்பரத்திற்குச் செல்லும் பொழுது, வைத்தீஸ்வரன் கோவில் அருள் மிகு முத்துக்குமர சுவாமியை வணங்கி முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் இயற்றினார். பின் சிதம்பரம் சென்று ஆனந்தக் கூத்தனை வணங்கிச் சிதம்பர மும்ம ணிக்கோவை என்ற நூலை இயற்றினார். யாப்பருங்கலக் காரிகை என்ற இலக்கண நூலிற்கு அமைந்த சமணமத மரபுடை உதாரணச் செய்யுட்களுக்கு மாறாகச் சிதம் பரச் செய்யுட்கோவை என்ற நூலை இயற்றினார். மேலும் நடராசரின் காப்பச் செய்யு ளைப் பெற்றுள்ள நீதிநெறிவிளக்கம் என்ற நூலையும் சிதம்பரத்தில் இயற்றினார்.

பின்பு தன் ஞானதேசிகராம் தருமை ஆதனக் கர்த்தரைத் தரிசித்துத் துறவு நிலை வேண்டினார். குமரகுருபரரின் பரிபக்குவத்தை அறிந்த ஞானதேசிகர் இவருக் குத் துறவறமாகிய காஷாயம் அளித்தார். ஞானதேசிகரை வணங்கிப் பண்டார மும் மணிக்கோவை என்ற நூலை இயற்றினார். பின்பு காசிக்கு யாத்திரை சென்று காசி யில் தில்லி பாதுஷாவைச் சந்தித்து அவரின் நட்பினைப் பெற்றார். அங்கு இந்துஸ் தானி மொழியை நன்கு கற்கச் சகலகலாவல்லிமாலை என்ற நூலை இயற்றிக் கலைமகளைப் போற்றினார். கலைமகள் திருவருளால் அம்மொழியில் தேர்ச்சி பெற்றார். இவரின் அருள் திறத்தையும், தமிழ்ப் புலமையையும் கண்ட தில்லி பாதுஷா இவர் காசியில் தங்குவதற்குத் திருமடம் அமைத்துத் தந்தார். அங்கு கேதாரக் கட்டத்தில் குமரகுருபரர் திருமடம் அமைந்தது. அத்திருமடம் குமாரசுவாமி

மடம் என்று அழைக்கப் பெறுகிறது. காசியில் குமரகுருபரர் துண்டி விநாயகர் பதிகம், காசிக்கலம்பகம் ஆகிய இலக்கியங்களை இயற்றினார்.

ஒருமுறை காசியிலிருந்து தருமபுரம் வருகை தந்து ஞானாசிரியரை வழி பட்டு மீண்டும் காசிக்குச் சென்று காசியில் பல ஆண்டுகள் வாழ்ந்து, வைகாசி மாதம் கிருஷ்ணபட்ச நாளில் சிவபெருமானின் திருவடியை அடைந்தார். இவருடைய காலம் கி.பி. பதினேோழாம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது.

(இவ்வரலாற்றுச் செய்திகள் திருப்பனந்தாள்
ஆதீன வெளியீடான குமரகுருபர சுவாமிகள்
பிரபந்தத் திரட்டில் அமைந்துள்ள வரலாற்றின்
அடிப்படையில் தரப்பெற்றுள்ளன.)

நீதிநெறி விளக்கம்

மூலமும் உரையும்

காப்பு

**“நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று”**

பொருள்

மனிதரின் இளமைப் பருவம் நீரிடைத் தோன்றும் குமிழி போன்றதாகும். மக்கள் தேடிக்கொள்ளும் செல்வம் தண்ணீரில் காற்றினால் சுருட்டப்படும் அலைகள் போன்றதாகும். மனிதரின் உடலானது நீரிலே எழுதப்படும் எழுத்து போன்றதாகும். எனவே நம்மவர்களே, பொன்னம்பலத்து இறைவனான சிவபெருமானை வணங்காமல் காலத்தைக் கழிப்பது ஏன்?

கருத்து

உவமைகள் மூன்றும் நிலையில்லாதவை. அவை போல மனிதரின் இளமை, பொருட்செல்வம், உடல் ஆகியவை நிலையில்லாதவை ஆகும்.

அருஞ்சொற்பொருள்

குமிழி - நீர்க்குமிழி, நிறை - தேடிய செல்வம், சுருட்டும் - சுருண்டு வரும், யாக்கை - உடல். மன்று - பொன்னம்பலம்.

நூல்

1

**“அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை”**

பொருள்

கல்வி ஒருவற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைப் பயனாகத் தரும். உலகத்தில் குற்றமில்லாத புகழையும் உண்டாக்கும். துன்பம் உண்டானால் அதைப் போக்குவதற்கு உதவும். சிற்றுயிராயெ மனிதர்க்கு அக்கல்வியைப் போலச் சிறந்த துணை இல்லை.

கருத்து

மக்களுக்குக் கல்வியே சிறந்த துணையாகும்.

அருஞ்சொற்பொருள்

மயக்கும் - பயன்தரும், புறங்கடை - புறஉலகம், உறுங்கவல் - உண்டாகும் துன்பம், உற்றுழி - உரியநேரத்தில், ஊங்கில்லை - மிகுதியும் இல்லை.

2

“தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன்று அறிவகற்றும் கல்வி - நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர் இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது”

பொருள்

நல்ல அணிகலன்களை அணிந்த பெண்ணே, மடமையை அழித்து, அறிவை விரிவாக்கும் கல்வி தொடங்கும்போது துன்பம் அளிப்பதாய் அமைந்து, பின் . இன்பத் தைத் தரும். ஆனால் மிகுந்த காமமோ தொடக்கத்தில் சிறிதுநேரம் இன்பத்தைத் தந்து, பின்பு மிகுதியான துன்பத்தைத் தரும்.

கருத்து

காமத்தால் உண்டாகும் சிற்றின்பத்தை விடக் கல்வியால் வரும் இன்பம் பேரின்பமாகும்.

அருஞ்சொற்பொருள்

மடங்கொன்று - அறியாமையை அழித்து, அறிவு அகற்றும் - அறிவை விரிவுபடுத்தும், சின்னீர் இன்பம் - சிறிய இன்பம், முற்றிழாய் - முழுமையான அணிகலன்கள் (இழை அணிகலன்), பீழை - துன்பம்.

3

“கல்வியே கற்புடைப் பெண்டிராப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீர்கவியாச் -சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.”

பொருள்

கல்வியைக் கற்கும் ஆடவர்க்கு அவர்கள் கற்ற கல்வி அவர்களுக்குக் கற்புடைய மனைவி போன்றதாகும். கற்கின்ற பாடல் மனைவிக்குரிய மகன்போல ஆகும். கற்ற பாடலின் சொல் வளத்தைக் கூறுதல் வாழ்க்கைக்கு நிறைந்த செல்வமாகும். மேலும் மாட்சிமைப்பட்ட அறிஞர்கள் சபையில் அழகு செய்யும் சொல்வன்மை மிகுந்த செல்வமும் ஆகும். இத்தகு நிலை சிலரிடமே உண்டு.

கருத்து

கல்வி, கவி இயற்றல், கவிக்குப் பொருள் கூறல், பொருளை எடுத்துரைத்தல் ஆகிய நான்கும் சிலருக்கே அமையும்.

அருஞ்சொற்பொருள்

பெண்டிர் - மனைவி, தீங்கவி - இனிமையான கவிதை, மல்லல் - வளப்பம், வெறுக்கை - செல்வம், மாண்அவை - மாண்புடைய சபை, மண்ணுறுத்தும் - பிறருக்கு அறிவுறுத்தும் தன்மை.

4

“எத்துணைய ஆயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாகும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.”

பொருள்

ஒருவன் கற்ற கல்வி எத்துணைதான் பெரிதாய் இருந்தாலும், இடமறிந்து உணர்தல் வேண்டும். அவ்வாறு இடனறிதல் இல்லையானால் பயன் இல்லை. இடத்தை ஆராய்ந்து அறிந்து பிறருக்குச் சொல்லுகின்ற ஆற்றலும் வேண்டும். அச்சொல்வன்மை இல்லையெனில் என்ன பயன்? சொல் வன்மை இருந்தால் பொன்னாலாகிய மலர் நறுமணம் உடையது போன்ற சிறப்புடையதாகும்.

கருத்து

கல்வியால் நூலின் உட்பொருளை ஆய்ந்து அறிதல் வேண்டும். அறிந்தவற்றைச் சொல்லுகின்ற சொல்வன்மை வேண்டும். இவை இரண்டும் இல்லையென்றால் கல்வியால் பயன் இல்லை.

அருஞ்சொற்பொருள்

உய்த்துணர்வு - ஆராய்ந்து அறியும் உணர்வு, என்னாம் - என்னபயன், பொன் மலர் - பொன்னாலாகிய மலர், நாற்றம் - மணம்.

5

“அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் - நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று.”

பொருள்

கற்றவர் கூடியிருக்கும் அவைக்கு அஞ்சுகின்றவர்களின் கல்வி அறிவும், கல்லாதவர் அவைக்கு அஞ்சாமல் சொல்லும் சொல்லும், வரக்கூடிய குற்றத்திற்கு அஞ்சிப் பிறர்க்கு கொடுத்து உண்ணாதவரின் செல்வமும், வறுமையாளரின் இனிய நற்செயல்களும் தோன்றுவதைவிடத் தோன்றாமை நன்று.

கருத்து

அவைக்கு அஞ்சும் கல்வியும், அவைக்கு அஞ்சா அறியாமையும், கொடுத்து உண்ணாத செல்வமும், வறுமை உடையோர் எண்ணும் செயலும் தோன்றுவதை விடத் தோன்றாமை நல்லது.

அருஞ்சொற்பொருள்

மெய்விதிர்ப்பார் - உடல்நடுங்குவார், ஆகுல சொல் - பொருளற்றுக் கூறும் சொல், நவையஞ்சி - குற்றம் அஞ்சி, நல்கூர்ந்தார் - வறுமை உடையோர், இன்னலமும் - இனிய செயல்களும், பூத்தல் - தோன்றுதல்.

6

“கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.”

பொருள்

கலைமகள் நாவில் இருப்பவள் என்றாலும் அவளை உடைய கடவுளாம் நான்முகன் புலவர்க்கு நிகராக மாட்டான். ஏனென்றால் அந்த நான்முகன் படைக்கின்ற புகழ் இல்லாத உடம்பு அழியும். புலவர்கள் செய்கின்ற நூல்களாகிய உடல்கள் புகழைப் பெற்று அழியாமல் இருப்பனவாகும்.

கருத்து

கலைமகளை நாவிலே படைத்துக் கொண்ட பிரமனைக் காட்டிலும் நூல்க ளைப் படைக்கும் புலவர்கள் உயர்வுடையவர். (கலைமகள் நான்முகன் நாவிலும் புலவர்கள் நாவிலும் வாழ்ந்தாலும் பிரமன் படைத்த உயிர்களின் உடம்பு அழிய, புலவர்களால் படைக்கப் பெற்ற நூல்கள் அழியாது)

அருஞ்சொற்பொருள்

கலைமகள் - சரசுவதி, முகத்தது - இங்கு வாயினைக் குறிக்கும், மலரவன் - பிரமன், வண்டமிழோர் - வண்மை கொண்ட புலவர்கள், வெற்றுடம்பு - மனிதஉடம்பு, செய்யுமுடம்பு - படைக்கும் நூல்கள்.

7

“நெடும்பகல் கற்ற அவையத் துதவாது
உடைந்துளா ருட்குவரும் கல்வி - கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்.”

பொருள்

பலகாலம் முயன்று கற்ற கல்வியால் கற்றவர் கூடிய அவையில் எடுத்துக் கூற இயலாதவரின் கல்வியானது, பகற் பொழுதில் பிறருடைய மனைவியைக் கண்டு ஆசைப்பட்டுப் பின் தமையென்று விலக்குவதைக் காட்டிலும் தீமை உடைய தாகும். ஏனென்றால் அக்குற்றத்தை நீக்கி விடலாம். சொல்வன்மை இல்லாத கல்வியை நீக்க முடியாது.

கருத்து

நன்கு கற்றாலும் அவையத்து எடுத்துச் சொல்லும் சொல்வன்மை இன்றிய மையாதது.

அருஞ்சொற்பொருள்

நெடும்பகல் - நீண்டகாலம், துடைந்துளா - சொல்வன்மை இல்லாது தோற்றவன், உட்குவரும் - அச்சமுடைய, கடும்பகல் - நண்பகல், எதிலான் - பிறன், இல் - மனைவி, நீப்பரிது - நீக்க முடியாது.

8

“வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்து சில கற்பான் தொடங்கல் - கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்கு
எய்த்துப் பொருள்செய் திடல்”

பொருள்

மனிதர் தாங்கள் முயன்று கடினப்பட்டுக் கற்ற கல்வியின் உட்பொருளைப் பாதுகாத்தல் வேண்டும். அவ்வாறு பாதுகாக்காமல் மேலும் மேலும் நூல்களைக் கற்கத் தொடங்குதல் கூடாது. அவ்வாறு தொடங்குதல் கையிலுள்ள பொருளைத் தவற விட்டுவிட்டு, மீண்டும் அந்தப் பொருளைத் தேடிச் சல்லடையால் சலித்து எடுத்தலைப் போன்றதாகும்.

கருத்து

கற்றவற்றை மறக்கக் கூடாது. அவற்றை மனதில் போற்றிப் பதிந்து கொண்ட பிறகே மேலும் கல்வியைக் கற்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

ஓம்பாது - பாதுகாக்காது, பரிந்து - மேலும் வருந்தி, கருந்தனம் - பெரும் பொருள், கைத்தலம் - கையில், உய்த்துச் சொரிந்திட்டு - அறியாமல் தொலைத்து விட்டு , அரிப்பரித்து - சலித்து , ஏய்த்து - வருந்தி, பொருள்செய்திடல் - பொருளைத் தேடுதல்.

9

“எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம் - மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்”

பொருள்

எத்தகைய சிறப்பு இருந்தாலும் வறியவர் கல்வி தினையளவும் சிறப்புடை யதாக அமையாது. எதுபோல என்றால் மனைவியிடம் மாண்பாகிய குணநலம் இல்லை யென்றால் அவன் கணவன் நடத்தும் நல்லறம் சிறப்படையாதது போல.

கருத்து

வறுமையாளர் கல்வி சிறப்படையாது. கல்வி சிறப்படையச் செல்வமும் வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

இலம்பாட்டார் - வறுமையை உடையவர், சீர்ப்பாடு - சிறப்பு, மனைத்தக்காள் - மனைவி, மாண்பு - நற்குணம், மணமகன் - கணவன், பூண்ட நல்லறம் - நடத்தும் நல்லறம், புலப்படா - சிறப்படையாது,

10

“இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினுமொன் றில்லானேல்
வன்சொல்லின் அல்லது வாய்திறவா - என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம்
பித்துடைய அல்ல பிற”

பொருள்

ஒருவன் இனிய சொல்லை உடையவனாகவும், அடக்கம் உடையவனாக இருந்தாலும் அவன் செல்வம் இல்லாதவனாக இருப்பானேயானால் அவனைக் கடு ஞ்சொல்லால் சொல்லுவதற்கு உலகம் வாய் திறக்குமே அல்லாது, பாராட்ட வாய் திறக்காது. அதே வேளை செல்வம் உடையவன் எதைச் சொன்னாலும் இக்கடல் சூழ்ந்த உலகம் அவன் அடியில் அடங்கி நிற்கும். இத்தகைய நிலை அறிவற்ற செய லாகும்.

கருத்து

செல்வர்க்குத்தான் உலகம் அடங்கும். இது தவறு.

அருஞ்சொற்பொருள்

தாழ்நடையன் - பணிவு இல்லாதவன், ஒன்று இல்லானேல் - செல்வம் இல்லாதவன், வன்சொல் - கடுஞ்சொல், கைத்துடையான் - கைப்பொருள் செல்வம், கடல்ஞாலம் - கடல் சூழ்ந்த உலகம், பித்துடையது - நல்ல அறிவுடையது அல்ல.

11

"இவறன்மை கண்டும் உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப - பெரிதும்தாம்
முற்பகல் நோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை அன்று."

பொருள்

செல்வம் இருந்தும் கொடுக்கும் தன்மை இல்லாத உலோபத் தன்மை உடைய வரைச் செல்வம் வேண்டுவோர் அவர்களை வேண்டி, அவர்கள் கூறும் சிறிய பணிக ளையும் செய்வர். அதனை விடுத்து முற் பிறவியில் மிகவும் தவம் செய்தவரைத் தவம் செய்யாதவர் பின் தொடர்ந்து செல்வது கல்வி அறிவாகும். அறிவு இல்லாமை அன்று.

கருத்து

கொடை உள்ளம் இல்லாத செல்வரிடம் யாசிப்பதை விட, தவம் உடையாரை வேண்டுவது கல்விக்கு அழகாகும்.

அருஞ்சொற் பொருள்

இவறன்மை - உலோப குணம், உடையவர் - பொருள் உடையவர், குறையி ரந்தும் - பின்பற்றி யாசித்தும், குற்றேவல் - சிறிய ஏவல்களை, நோலாதார் - தவம் செய்யாதார், கற்புஅன்றோ - அறிவுடைமை அன்றோ.

12

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்"

பொருள்

கல்வி கற்றவர்க்கு அக்கல்வியே நல்ல அணிகலன் ஆகும். மற்ற பூணும் அணிகலன்கள் தேவையில்லை. ஒரு அழகுக்கு மற்றொரு அழகு சேர்க்க வேண்டிய தில்லை. ஆதலால் கல்வி அழகே அழகாகும்.

கருத்து

கல்வி அழகே சிறந்த அழகாகும்.

அருஞ்சொற் பொருள்

கலன் - அணிகலன், அணிகலம் - நகை, முற்ற முழுமணிப்பூண் - முழுமை யும் மணிகளால் ஆன அழகுக்கு, பூண் வேண்டார் - அழகு வேண்டார்.

13

“முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க - சிற்றுளியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்,”

பொருள்

அழகான காதணிகளை அணிந்த பெண்ணே, இவ்வுலகில் முழுமையும் அறிந்தவர் இல்லை. எனவே எல்லாவற்றையும் கற்றுவிட்டோம் என்று செருக்கால் களிபடையக் கூடாது. சிறு உளியானது மலை போன்ற கல்லையும் தகர்த்து எறியும். ஆனால் கொல்லன் உலைக்களத்தில் அடிக்கும் சம்மடியால் பாறைகளை எளிதாக உடைக்க முடியாது. (கூர்மை இல்லாதது சம்மட்டி)

கருத்து

கற்றவர் செருக்கு கொள்வது தவறு. கூர்மையான சிறிய உளி போன்று கற்றவர் செருக்குற்றவரை அழித்து விடுவர். செருக்குற்றவர் பிறரைத் தோற்கடிக்க முடியாது.

அருஞ்சொற் பொருள்

முற்றும் உணர்ந்தவர் - முழுமையும் அறிந்தவர், முழுவதூஉம் கற்றனம் - எல்லாம் கற்றுவிட்டோம், களியற்க - செருக்கால் மகிழ்ச்சி அடைய வேண்டாம், தகரும் - உடையும். தகரா உடையாது. கொல்லுலை - கொல்லன் உலைக்களம்.

14

“தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று”

பொருள்

தம்மை விடச் செல்வத்தில் குறைந்தவர்களைப் பார்த்துத் தம்மிடம் உள்ள செல்வத்தைப் பெரிது என்று ஏற்றுக் கொண்டு மனமகிழ்தல் வேண்டும். அதே வேளை தம்மைவிடக் கற்றவரைப் பார்த்துத் தம் கல்விக்கு அவர்தம் கல்வி எவ்வளவு உயர்ந்தது என்று எண்ணிச் செருக்கு கொள்ளாதிருக்க வேண்டும்.

கருத்து

செருக்கு கொள்ளாது மற்றவர் கல்வியைப் பார்த்து மேலும் மேலும் கற்கவேண்டும்.

அருஞ்சொற் பொருள்

மெலியார் - தம்மைவிடச் செல்வம் குறைந்தவர், தமதுடைமை - தமது செல்வம் உடைமை, கருத்தழிக - செருக்கு அழிக, எற்றே - எவ்வளவு உயர்ந்தது.

15

“கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.”

பொருள்

கல்வி உடைமையும், செல்வம் உடைமையும் என்ற இரண்டும் செல்வம் எனப்படும். (எப்பொழுது என்றால்) இரண்டு செல்வமும் இல்லாதார் தம்மைச் தாழ்ந்து பணிந்திருக்கும் பொழுது, தாமும் அவரைப் பணிந்திடல் வேண்டும். தாழ்வாரைக் கண்டு செருக்கு கொள்ளக் கூடாது.

கருத்து

கல்வியும் செல்வமும் உடையவர்கள் தம்மைவிட அவ்விரண்டில் தாழ்வு டையவர்களிடத்தில் தாங்களும் பணிந்திருக்க வேண்டுமே அன்றிச் செருக்குக் கொள்ளக் கூடாது. அப்பொழுதுதான் அவை இரண்டும் செல்வம் என மதிக்கப்படும்.

அருஞ்சொற் பொருள்

இல்லார் - அவ்விரண்டு செல்வமும் இல்லாதவர், குறையிரந்து - யாசித்து பணிந்து.

16

“ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு.”

பொருள்

கல்வியிலும் செல்வத்திலும் பெரியவர்கள் அவ்விரண்டும் இல்லாதவரின் செயல்களைக் கண்டால் பெரிதும் தாழ்ந்திருத்தல் வேண்டும். எதுபோல என்றால் தராசுத் தட்டைத் தூக்கினால் கனமான தட்டு, மெலிதான பொருள் வைக்கப்பட்ட தட்டுக்குத் தாழ்ந்திருப்பது போலவாம்.

கருத்து

தமக்குத் தாழ்ந்தவரிடத்தும் தாழ்ந்து நடப்பது கற்றோருக்குச் சிறப்பாகும்.

அருஞ்சொற் பொருள்

ஆக்கம் - கல்வி, செல்வத்தால் பெற்ற வளம், மீச்செலவு - மேற்கொண்ட செயல்கள் , தூக்கின் - தராசைத் தூக்கினால், மெலியது - குறைந்த பொருள் வைக்கப்பட்ட தட்டு, வலியது - கடினமான பொருள் வைக்கப்பட்ட தட்டு.

17

“விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே - புலப்பகையை
வென்றனம் நல்லொழுக்கில் நின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மில் கொளின்.”

பொருள்

அறநூல்களில் விலக்கப்பட்டனவற்றை விலக்கி, கூறப் பெற்ற செயல்களை மட்டும் செய்கின்ற சான்றோரும், ஐந்து புலன்களையும் வென்றோம், நல்ஒழுக்க த்தில் நிற்கின்றோம் என்று தமக்குத் தாமே செருக்குக் கொள்வார்களேயானால் அவர்களின் செயலும் பயனற்றதேயாகும்.

கருத்து

சான்றோரின் தற்புகழ்ச்சி நலம் விளைவிக்காது.

அருஞ்சொற் பொருள்

விலக்கிய - அறநூல்களால் நீக்கப் பெற்ற, ஓம்பி - நிகழாமல் காத்து, நலத்தகையார் - சான்றோர், நல்வினை - நற் செய்கைகள், புலப்பகை - ஐந்து புலன்களின் பகைகள், தம்பாடு - தம்பெருமை, தம்மிற்கொளின் - தமக்குத் தாமே பெருமையாக எண்ணிக்கொண்டு.

18

“தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை
வியவாமை அன்றே வியப்பாவது இன்பம்
நயவாமை அன்றே நலம்.”

பொருள்

ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதல் எரியும் விளக்கில் நீரை வார்த்து வளர்த்ததைப் போலாகும். (நீர் ஊற்றினால் வளராது. அவிந்துவிடும்) எனவே தன்னை ஒருவன் புகழ்ந்து கொள்ளாமை அவனுக்குப் புகழைத் தரும். (அது எதுபோல என்றால்) இன்பத்தை விரும்பாமல் இருப்பது இன்பத்தைத் தருவது போல.

கருத்து

தற்புகழ்ச்சி இகழ்ச்சியைத் தரும். தற்புகழாமை பெருமையைத் தரும்.

அருஞ்சொற்பொருள்

வியப்பிப்பான் - புகழ்ந்து கொள்கின்றவன், தீச்சுடர் - விளக்கு, நயவாமை - விரும்பாமை.

19

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறம்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்."

பொருள்

பிறர் தரும் நன்மதிப்பைப் பெற விரும்புகின்றவன் என்றும் மறவாது செய்யக் கூடியது ஒன்று உண்டு. அது என்னவென்றால் மற்றவரின் பெருமைகளை எல்லாம் கூறி, அவர்தம் தீய ஒழுக்கத்தை வெளியே கூறாது பாதுகாத்து, அனைவரிடமும் பணிவான சொற்களைச் சொல்லுவதாகும்.

கருத்து

பிறரின் தாழ்வை மறைத்து, அவரின் பெருமையை மட்டும் கூறுதல் ஒருவ னுக்குப் புகழைத் தரும்.

அருஞ்சொற் பொருள்

பெருஞ்சுட்டு - பெருமை மிக்க புகழ், நோற்பது - கடைப் பிடிக்க வேண்டுவது, சீர் - பெருமை, சிறுமை - தீய செயல்கள், தூற்றி - பரப்பி, புறங்காத்து - பரவாது காத்து, தாழ்ச்சி சொலல் - பணிவான சொற்களைச் சொல்லுதல்.

20

"கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக்கு உண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்."

பொருள்

கற்றபடி ஒழுக வேண்டும் என்று பிறர்க்கு மட்டும் எடுத்துச் சொல்லி, தாம் கற்றபடி நில்லாதவர் கூறும் சொற்களுக்கு ஓர் வலிமை உண்டோ. (இல்லை) எனவே சொன்னபடி நீங்கள் நில்லாதது ஏன் என்று வெட்கப்படும்படி மற்றொருவன் எதிர்நின்று சொல்லாமல் பிறருக்கு அறிவுரை கூறவேண்டும்

கருத்து

கற்றபடி நிற்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

வாய்ப்படூஉம் - வாயினால் சொல்லும், வெற்றுரைக்கு - பயனற்ற சொற்களுக்கு, சொற்றநீர் - சொன்னபடி நீங்கள், நாணுறைப்ப - வெட்கப்படும்படி கூற, நேர்ந்தொருவன் - பிறன் ஒருவன்.

21

"பிறர்க்குப் பயன்படத் தாம்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுரையார் - திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்."

பொருள்

ஒருவர் தாம் வருந்திக் கற்றவற்றை மற்றவர்களுக்குப் பயன் உண்டாகும்படி சொல்லும் பொழுது, அதனைப் பணத்துக்கு விற்றால் தங்களுக்கு வேறு ஒரு பயனைப் பெறுவர். அது என்னவென்றால் பலதிறப்பட்ட செயல்களுக்கு அஞ்சாத ஆற்றலை உடைய தென்புலத்துத் தலைவனாம் யமனைத் தம்மைத் தண்டிக்குமாறு ஏவல் கொள்ளுவதாகும்.

கருத்து

பொருளுக்காகக் கல்வியை விற்பது, நரகத்தைத் தரும்.

அருஞ்சொற் பொருள்

தாம்கற்ற விற்பார் - தாம் கற்றவற்றைப் பொருளுக்கு விற்பவர், திறப்படுஉம் - பலதிறப்பட்ட, விறல் - வலிமை, தென்புலத்தார் கோ - தென்திசைக்குரிய தலைவன் (யமன்)

22

"கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்கு
ஒற்கமின் றூத்தைவாய் அங்காத்தல் - மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பனவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்."

பொருள்

கற்பதற்கு உரிய நல்வினை இல்லாதவர்கள், கற்றவர்கள் சூழ்ந்திருக்கும் அவையில் நாவடக்கம் இல்லாமல், தூய்மையற்ற வாயால் சொற்களைச் சொல்ல வாய் திறத்தல் - தானியக் கதிர்களைக் கவர்வதற்கு வரும் விலங்கும், பறவையும் அஞ்சும் பொருட்டுப் புல்லால் அமைத்து வைக்கப்பட்ட உருவத்தைக் கண்டு அவை அஞ்சுவது போல, கல்லாதவன் உருவத்தைக் கண்டு அஞ்சாதீர்கள் என்று கற்றோர் கூறுவது போன்றதாகும். (புல்லுருவம் பொய் என்று அறிந்துவிட்டால் விலங்கு, பறவைகள் அஞ்சாது. அதுபோலக் கல்லாதவன் என்பதை அறிந்தால் கற்றவர் சபை அவனைக் கண்டு அஞ்சாது என்பதும் பெறப்படும்)

கருத்து

கல்லாதவர் கற்றவர் அவை முன்பு கற்றவர் போலப் பேசுதல் தவறாகும்.

அருஞ்சொற் பொருள்

கற்பனவூழ் - கற்பதற்குரிய நல்வினை, கலவிக்கழகம் - கற்றவர் அவை, ஒற்கமின்று - நாவடக்கம் இல்லாமல், ஊத்தையாய் - தூய்மையற்றவாய், அங்காத்தல் - வாய் திறத்தல் (வாய் திறந்து சொல்லுதல்), வல்லுரு - வலிய உருவம், மா பறவை - விலங்கு, பறவை, புல்லுரு - புல்லால் செய்யப்பட்ட உருவம்.

23

“போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொள் நகையினார் வாய்ச்சேரா - தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்.”

பொருள்

குற்றமற்ற கல்வியானது, அறிவுடையவர் பக்கமின்றி, மேம்பட்ட உள்ளீடு இல்லாத, வெறும் நகைப்பேச்சு உடையவரிடம் சேராது. எதுபோல என்றால் தாக்கி வருத்துகின்ற பெண் தெய்வம் ஆண்கள் விரும்புகின்ற அழகுடைய பெண் உருவத் தைப் பெற்றிருந்தாலும், அந்தப் பேடாகிய பெண்ணிடத்தில் பெண்இன்பம் கொள்ளப் படாதது போலும்.

கருத்து

நகைச்சுவை விளையாட்டாளரிடம் கல்வி சேராது.

அருஞ்சொற் பொருள்

போக்கறு - குற்றமற்ற, புலமிக்கார் பால் - அறிவுடையவர் பக்கம், மீக்கொள் - மேம்பட்ட, நகையினார் - நகைச்சுவையாளர், வாய்ச்சேரா - பக்கம்சேரா, தாக்கணங்கு - தாக்குகின்ற பெண் தெய்வம், ஆணவாம் - ஆண் விரும்புகின்ற, பெண்ணலம் - பெண் இன்பம் (காமச்சுவை/, பேடு - பெண்பறவை.

24

"கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றம் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலாரை நோவ தெவன்"

பொருள்

கற்றவர் தாம் கற்றவற்றைக் கல்லாதவர் செவியில் கூறுவதால் ஏற்படும் அவமானமாகிய குற்றம், தம்முடையதே ஆகும். கல்லாதவருடையது அன்று. எல் லாவற்றையும் அறிந்திருந்த கற்றோர், கல்லாதவரின் அறியாமையை உணராதது தம்முடைய குற்றமே தவிர, பிறர் குற்றம் என்று நொந்து கொள்ளுவது ஏன்?

கருத்து

கற்ற கல்வியை ஏற்றுக் கொள்ளுபவர்க்கே கூறுதல் வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

கற்றன - தாம் கற்றது, செவிமாட்டி - செவியில் கூறி, கையறூஉம் குற்றம் - தாம் சிறுமை அடைவதற்குரிய குற்றம், ஏதிலரை - பிறரை, நோவது - நொந்து கொள்ளுவது.

25

"வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் - மாத்தகைய
அந்தப் புரத்ததுபூஞை புறம் கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு"

பொருள்

கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் மிக்கவர்கள் வேந்து அவையில் எப்பொழுதும் இருந்து காக்க வேண்டும் என்று எண்ண மாட்டார்கள். (வெளியில் இருந்தாலும் புகழ் பெறுவார்கள்.) கல்லாதவர்கள் அரசவையில் முழுமையாக இருந்து பாதுகாத்தாலும் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். (புகழ் பெற மாட்டார்கள்) எதுபோல என்றால் பெருமையுடைய வீட்டின் உட்புறத்தில் இருக்கும் பூனையை விட, வாயிலின் வெளி ப்புறத்தில் இருக்கும் கட்டுத்தறியை முறிக்கும் யானை பெருமை உடையது போலாகும்.

கருத்து

கற்றவர்கள் எங்கிருந்தாலும் புகழ் பெறுவர். கல்லாதவர் அவையில் இருந்தாலும் புகழ் பெறமாட்டார்கள்.

அருஞ்சொற் பொருள்

வேத்தவை - அரசவை, மிகன்மக்கள் - கல்வி அறிவு ஓழுக்கங்களால் சிறந்தவர், வேறுசில - கல்லாதவர், உவப்பு எய்தார் - மகிழ்ச்சியடையார், மாத்தகைய - பெருமையுடைய, அந்தப்புரத்து - வீட்டின் உட்புறத்தில், பூஞை - பூனை, கந்துகொல் - யானை கட்டப் பெற்றிருக்கும் கல் தூணாகிய கட்டுத்தறி.

26

"குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் - அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை."

பொருள்

கற்புடைய இல்லறப் பெண்ணிற்கு உறுதியாக அவள் கணவனே தெய்வம் ஆவான். புதல்வர்களுக்குத் தாயும் தந்தையும் தெய்வம் ஆவார்கள். விரதம் காக்கும் பிரமச்சாரிகளுக்கு அவர்கள் ஆசிரியரே தெய்வம் ஆவர். அனைவருக்கும் தெய்வம் இலை போன்ற முகத்தை உடைய பதக்கங்களால் ஆகிய அணிகலன்களை அணிந்த அரசனே ஆவான்.

கருத்து

அவரவர்களுக்குரிய தெய்வத்தைப் போற்ற வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

குலமகள் - கற்புடைய மனைவி, கொழுநன் - கணவன், மன்ற - உறுதியாக, அறவோர் - துறவாமல் விரதம் காக்கும் பிரமச்சாரி, அடிகள் - ஆசிரியர், இறை - மன்னவன்.

27

“கண்ணின் சொலிச்செவியின் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந் - தண்ணளியான்
மன்பதை ஓம்பாதார்க் கென்னாம் வயப்படைமற்று
என்பயக்கும் ஆணல் லவர்க்கு.”

பொருள்

கண்ணால் தன் கருத்தைக் குறிப்பால் அறிவித்துப் பணிகளைச் செய்யவைத்து, நாட்டின் நடைமுறைகளை நேரில் பார்ப்பதைப் போல் செவியால் அறிகின்ற மன்னனின் பெருமை உடைய செயல், முன்பு மன்னன் செய்த நல்வி னைப் பயனால் உண்டாகும். இவ்வாறு தன்னுடைய அருளால் குடிகளைப் பாதுகாக்காது போனால் அம்மன்னருக்கு என்ன பயன் உண்டாகும். (ஒரு பயனும் உண்டாகாது. எது போல என்றால்) வன்மையுள்ள ஆயுதம் கொண்ட படைகளால் பேடியர்க்கு என்ன பயன் ஏற்படும். ஒன்றும் ஏற்படாது.

கருத்து

அரசன் அருள் உள்ளத்தோடு குறிப்பால் அறிவித்தும், செவியால் கேட்டறிந் தும் நாட்டு நடப்புகளைத் தெரிந்தும், குடிகளை அருளுடன் காக்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

கண்ணின்சொலி - கண்ணின் குறிப்பால் தன் கருத்தைப் புலப்படுத்தி, இறைமாட்சி - மன்னனின் புகழ், புண்ணியத்தின் பாலது - முன்வினைப்பயன், தண்ணளி - குளிர்ச்சி பொருந்திய அருள், மன்பதை - மன்னுலகம், ஓம்பாதார் - காவாதார், வயப்படை - வன்மையுள்ள ஆயுதம். ஆணல்லவர் - பேடி.

28

“குடிகொன் றிறைகொள்ளும் கோமற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலும் மாண்பே - குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.”

பொருள்

மக்களை வருத்தி வரியை வாங்கும் மன்னனை விட, கன்றை உடைய பசுவின் மடியை அறுத்துப் பால் கறக்கும் செயலும் சிறந்ததாகும். மக்களைப் பாதுகாத்து வரி கொள்ளும் முறைமையில் வரி வாங்கும் மன்னர்க்கு மேலும் மேலும் செல்வம் வெள்ளம் என்ற எண்ணிக்கையை விடப் பெருகும்.

கருத்து

மன்னன் அளவறிந்து வரி பெறல் வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

குடிகொன்று - மக்களை வருத்தி, இறை - வரி, கோமகன் - அரசன், கற்றா - கன்றைஉடைய ஆ (பசு), மடிகொன்று - மடி அறுத்து, குடிஓம்பி - குடிகளைப் பாதுகாத்து, மாநிதியம் - செல்வம், வெள்ளம் - பண்டைக்காலத்து ஒருவகை எண்ணிக்கை.

29

"இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்
நின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்."

பொருள்

இன்று பெற்றுக்கொள்ள வேண்டிய பொருள்களை மறுநாள் பெற்றுக்கொள்ளப் பொறுக்காதவன், பிறர் தம் குறைகளைக் கூறிடச் சிறிது நேரம் கூட எதிரில் நின்று கேட்காதவன், பக்கத்தில் வந்து ஒருவன் (அமைச்சன்) நல்லவற்றை எடுத்துச் சொன்னால் அதனைக் கேட்காமல் பல்லைக் கடித்துப் பயமுறுத்துபவன் ஆகிய தன்மைகளைக் கொண்டவன் அரசன் அல்ல. அவன் வழிச்செல்வோரை வருத்திப் பொருளைக் கவரும் வேடன் போன்றவன் ஆவான்.

கருத்து

அரசன் காட்சிக்கு எளியனாய், பிறர்சொல்லை ஆராய்பவனாய், கருணை உள்ளவனாய் விளங்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

இன்று கொளற்பால் - இன்று கொள்ள வேண்டிய பொருளை, நின்று குறையிரப்ப - எதிர்நின்று குறைகளைச் சொல்ல, நேர்படான் - நின்று கேட்க மாட்டான், ஆவன - அரசாட்சிக்கு வேண்டுவன, எயிறு - பல், அலைப்பான் - கோபிப்பான், ஆறலைக்கும் வேடலன் - வழிப்பறி செய்யும் வேடனாம் கள்வன். வேந்து - அரசன்.

30

"முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணா - இடித்துஇடித்துக்
கட்டுரை கூறின் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போடு உற்ற பிணம்"

பொருள்

சூடுவதற்குரிய மலர்களைச் சூடியும், பூசக்கூடிய சந்தனம் முதலியவற்றைப் பூசியும், உடுத்த வேண்டிய பட்டாடை முதலியவற்றை உடுத்தியும், உண்ணக் கூடிய உணவுகளை உண்டும் உயிருடன் வாழுகின்ற மன்னன், அச் செயல்களில் உள்ள குற்றங்களை அமைச்சர்கள் இடித்துக் கூறும் பொழுது, அதனைச ஏற்காத அரசன், காதில் வாங்கிக் கொள்ளாமலும், கண்களால் விழித்துப் பாராமலும் பெரு மூச்சு விடும் பிணம் போன்றவன்.

கருத்து

அரசன், சான்றோர் இடித்துரைப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லை யென்றால் உயிருடன் வாழ்ந்தும் பிணம் போன்றவன் ஆவான்.

அருஞ்சொற் பொருள்

முடிப்ப - சூட, பூசுப - உடம்பில் நறுமணப் பொருள் பூசுதல், இடித்து - அமைச்சர் இடித்துக் கூறுதல், நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு.

31

"ஒற்றின்தெரியா சிறைப்புறத் தோர்து மெனப்
பொற்றோள் துணையாத் தெரிதந்தும் - குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை த்
முறையிடினும் கேளாமை அன்று."

பொருள்

ஒற்றர்களால் அறிந்து கொள்ள முடியாத நாட்டு நடப்புகளை அரசன் மறைவாய்ச் சென்று, தன் தோள்களையே துணையாகக் கொண்டு சென்று, குடிமக்க ளின் குறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு தெரிந்து கொள்ளும் பொழுது இன்னும் அறிந்து கொள்ள முடியாதவை இருக்குமோ என்று அஞ்ச வேண்டும். இதுவே செங்கோன்மையாகும். அதே வேளையில் குடிமக்கள் தாங்கள் நேரிலே வந்து முறையிட்டாலும், அதைக் கேளாது இருக்கக் கூடாது.

கருத்து

குடிமக்களின் குறைகளை ஒற்றின் மூலமாகவோ, மறைந்திருந்து தானாக வோ, அல்லது மக்கள் நேரிடையாகக் கூறுவதாலோ மன்னன் அறிந்து கொள்ள வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

சிறைப்புறத்து - மறைவிடத்திலிருந்து, ஓர்தும் - அறிந்து கொள்வோம், குற்றம் அறிவரிது - குற்றத்தை முழுமையாக அறிவது அரிது, முறையிடினும் - மக்கள் குறையை முறைபபிட்டாலும், கேராமையன்று - கேட்க வேண்டும்.

32

“ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரிஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு.”

பொருள்

அயலவர்கள் எதை வேண்டுமானாலும் கூறுவார்கள். அதைக் கேட்கும் அரசன் அவற்றில் உள்ள குறைகளை நீக்கி, உண்மைக் கொள்கைகளை ஏற்றுக் கொள்வது அரசனுக்குப் பேரறிவாகும். பிறர் எவ்வாறெல்லாம் சொல்வார்கள் என்றால் எதிர் நிற்கும் கருமை நிறக் காக்கையை வெண்மை நிறம் என்பர். தாயைக் கொலை செய்வதும் பொருத்த மானதே என்றும் கூறுவர். இவ்வாறு எதைத்தான் சொல்ல மாட்டார்கள்

கருத்து

பிறர் கூறுவதில் குற்றம் களைந்து உண்மைப் பொருளை அரசன் உணர வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

ஏதிலார் - அயலவர், இறைமகன் - மன்னன் , கோது ஓரீஇ - குற்றம் நீக்கி, முதுக்குறைவு - பேரறிவு, வெளிது - வெண்மை, சால்புடைத்து - பொருத்தமுடையது.

33

"கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சிமற் றில்லாகும் - மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ
பேரா பெருமூச் செறிந்து"

பொருள்

கெடுதல்களைக் கண்கூடாகக் கண்டாலும் அவற்றைக் கீழ் மக்கள் அறிந்து, அக்கெடுதலிலிருந்து தப்பிக்க அறிவு கொள்வதில்லை. அவர்களின் நிலை எப்படி என்றால் தம்மைச் சுற்றித் த எரிந்தாலும், பெரிய பாம்புகள் பெரு மூச்சு விட்டபடி உறங்கும், அந்த இடத்தை விட்டுப் பெயராதது போன்றதாகும்.

கருத்து

கீழ் மக்கள் தங்கள் கெடுதியை உணரும் அறிவில்லாதவர்கள். எனவே அரசன் அவர்கள்பால் சாரக்கூடாது.

அருஞ்சொற் பொருள்

கண்கூடா - கண்ணால் கண்டாலும், கீழ்மக்கள் - அறிவற்றவர்கள், மண்டுஎரி - மிக்கு எரிகின்ற நெருப்பு, தன்வாய் மடுப்பினும் - தன்னை எரிக்கும் சூழலில் இருந்தாலும், மாசுணம் - பெரிய பாம்பு, கண்துயில்வ - உறங்கும், பேராது - அசையாது.

34

"நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் - தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி."

பொருள்

பழைய நட்பினரைப் பிரியும்படி செய்தல், பகைவறை நட்பாக்கிக் கொள்ளுதல், ஒற்றர்களை இகழ்தல், அருகில் உள்ள அமைச்சர் உள்ளிட்டவரைச் சந்தேகித்தல், பெரியோரின் அறிவுரைகளை இகழ்தல், தம் இயல்பான குணம், மாறுபடுதல் ஆகியவை ஒரு அரசனுக்குப் பின்னால் கெடுதலைக் காட்டும் குறியீடுகளாகும்.

கருத்து

இந்த ஆறும் இல்லாதவனே தக்க அரசன் ஆவான்.

அருஞ்சொற் பொருள்

நட்டல் - நட்பாக்கிக் கொள்ளுதல், பக்கத்தார் - பக்கத்தில் உள்ள அமைச்சர் முதலியோர், தக்கார் - சான்றோர்கள், கோறல் அவமதித்தல்.

35

"பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினால் தாழ்வார்க்கு - அணியது
இளையாள் முயக்கெனினும் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகம் கொளல்"

பொருள்

தம்மால் வணங்கத்தக்க சான்றோர்கள் தமது அரண்மனை வாயிலில் வந்து நிற்க, அடக்கமுடியாத செருக்கால் எதிர்நின்று வரவேற்றலைத் தாழ்த்தி, அவர்கள் தம்மிடம் வரும்வரை காத்திருக்கும் அரசர்க்கு, இயல்பாகத் திருமகளின் (செல்வத்தின்) பெருமை சேர்ந்திருப்பினும் மூதேவியின் சேர்க்கை அவர்களுக்கு வெகுதொலைவில் இல்லை.

கருத்து

மன்னன் சான்றோர்களை எதிர்சென்று வரவேற்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

பணியப்படுவார் - அந்தணர், அருந்தவத்தோர், பெற்றோர் ஆகிய சான்றோர்கள். புறங்கடை - தலைவாயில், தணிவில் - அடக்கமுடியாத, களிப்பு - செருக்கு, அணியது - அண்மையது, இளையாள் - திருமகள், முயக்கு - சேர்ந்திருத்தல், சேய்மை - தொலைவு, மூத்தாள் - மூதேவி, போகம் - அவளின் சேர்க்கை.

36

“கண்ணோக்கு அரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு.”

பொருள்

அரசன் இரவலர்களைப் பார்க்கும் பொழுது இனிமைப் பார்வை அரும்பாகும். மலர்ந்த முகம் மலர்ந்த மலராகும். வரவேற்றுக் கூறும் இன்மொழிச் சொற்கள் இனிய காயாகும். அரசன் கொடுக்கும் ஈகை பழமாகும். இத்தகைய தன்மையைக் கொண்ட அரசன் சலியாது கொடுக்கும் கற்பகமரம் போன்றவன் ஆவான்.

கருத்து

அருளோடு நோக்கி முகமலர்ந்து கருணையோடு வறியவர்க்கு அரசன் கொடை கொடுக்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

கண்ணோக்கு - கருணையோடு நோக்குதல், அரும்பு - மொட்டு, நகைமுகம் - சிரித்த முகம், இன்மொமி - இனிய சொல், தீங்காயா - இனிமையான காய், வண்மை - வள்ளல் தன்மை, சலியாத - சலியாது கொடுக்கும், கற்பகத்தரு - தேவர் உலகத்து மரம்,

37

“வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறா - ஆங்கதுகொண்டு
ஊறும் எறும்பிய கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோடு அயின்று.”

பொருள்

பாகர் கொடுக்கும் உணவை வாங்கும் யானையானது சிறிது தவறிக் கீழே சிந்தினால் யானைக்குக் கவலை இல்லை. ஆனால் யானை சிந்திய உணவைக் கொண்டு ஊரும் இயல்புடைய ஒரு கோடி எறும்புகள் தம் சுற்றத்துடன் உண்டு உயிர் வாழும்.

கருத்து

அரசன், பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும்.

அருஞ்சொற் பொருள்

வாங்கும் கவளம் - பாகன் கொடுக்க யானை வாங்கும் சோற்று உருண்டை, தூங்கும் - தொங்கும்கை, களிறு - யானை, துயருறா - வருந்தாது, உய்யுமால் - வாழும், ஆருங்கிளையோடு - சுற்றியுள்ள சுற்றத்தோடு, அயின்று - உண்டு (சாப்பிட்டு)

38

> **“மாகன் சிறுகக் குவித்து நிதிக்குவை**
> **ஈகையின் ஏக்கழுத்தம் மிக்குடைய - மாகொல்**
> **பகைமுகத்த வென்வேலான் பார்வையில் தீட்டும்**
> **நகைமுகத்த நன்கு மதிப்பு.”**

பொருள்

வானம் சிறிது என்னும்படிக் குவித்து வைக்கப் பெற்றிருக்கும் அரசனின் செல்வத்தை ஈகையால் பெறுவதை விடத் தலைமை சான்றதாகும். எது என்றால் பகை விலங்குகளைக் கொல்லும் ஆற்றல் உடைய வேலைக் கையிலே கொண்ட அரசனுடைய முகத்தைக் காணும் பார்வை ஆகிய மதிப்பு.

கருத்து

அரசனின் கொடையைக் காட்டிலும் அவன் அருட் பார்வை தலைப்பாடு உடையதாகும். (மதிப்புடையதாகும்)

அருஞ்சொற் பொருள்

மாகம் - வானம் (ஆகாயம்) , நிதிக்குவை - மிகுந்த செல்வம், ஏக்கழுத்தம் - தலைமைப்பாடு, மா -கொல் - பகையாகிய விலங்குகளைக் கொல்லும், வென்வேலான்- வெற்றிவேலை உடைய மன்னன், பார்வை - அருட்பார்வை, நன்கு மதிப்பு - நல்ல மதிப்புடையதாம்.

39

“களைகணாத் தம்மடைந்தார்க்கு உற்றுழியும் மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடையது
ஊனுடம் பென்று புகழுடம்பு ஓம்புதற்கே
தானுடம் பட்டார்கள் தாம்.”

பொருள்

பற்றுக்கோடாகத் தம்மை அடைந்தவர்க்கு உற்றுழி உதவ, இது காம இன்பத்திற்கு உரியது என்று எண்ணாது, வெற்றுடம்பைச் சான்றோர் தாங்கிக் கொள்ளாது உடம்பையும் கொடுப்பர். ஏனென்றால் இந்த உடம்பு தளர்நடை உடையது. நிலையில்லாத சதை உடம்பு என்று அதனைக் கொடுத்து, புகழுடம்பு பெறுவதற்கே சான்றோர் உடன்படுவார்கள்.

கருத்து

புகழைப் பெற உயிரையும், உடம்பையும் சான்றோர் கொடுப்பர்.

அருஞ்சொற் பொருள்

களைகணா - பற்றுக்கோடு காணாது, உற்றுழி - உரிய உதவி, மற்றோர் விளைவு - உடம்பால் அடையும் காமநுகர்ச்சி போன்ற வேறோர் உணர்ச்சி, வெற்றுடம்பு - நிலையில்லாத உடம்பு, தாங்கார் - தாங்கிக் கொள்ள மாட்டார், ஓம்புதற்கு - பெறுவதற்கு.

40

“தம்முடை யாற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்கு
இறுவரை யில்லை யெனின்.”

பொருள்

தம்முடைய ஆற்றலையும், மானத்தையும் இழந்து தம்முடைய உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் பாதுகாத்துக் கொள்க. (எப்பொழுது பாதுகாக்க வேண்டும் என்றால்) பின்பு சிறிது காலம் கழிந்தாலும் தமக்கு இறப்பு இல்லை என்று தெரிந்து கொண்டால் மானத்தை இழந்து உயிரைக் காக்கலாம்.

கருத்து

என்றாவது ஒருநாள் உடல், உயிர் அழிந்து இறப்பு நேரிடும். எனவே மானத்தைக் காக்க வேண்டும். (உயிர் அழியாது என்றால் மானம் அழிவதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று எதிர்மறையில் மானத்தின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.)

அருஞ்சொற் பொருள்

ஆற்றல் - திறமை, தோற்று - இழந்து, ஓம்புதல் - பாதுகாத்தல், சிறுவரை யாயினும் - சிறிதுகாலம் வரையிலாவது, இறுவரை - இறக்கும் காலம்,

41

“கலனழிந்த கற்புடைப் பெண்டிரும் ஐந்து
புலனொருங்கப் பொய்கடிந் தாரும் - கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரரும் அஞ்சார் முரண்மறலி
தும்பை முடி சூடினும்.”

பொருள்

தாலியை இழந்த கற்புடைப் பெண்டிரும், ஐந்து புலன்களையும் அடக்கிப் பொய்யை ஒழித்த துறவியரும், கொலைக் களத்தில் போர் வலிமையுடைய வீரரும் , வலிமை உடைய கூற்றுவன் உயிரைப் பறிப்பதற்கு எதிர் வந்தாலும் அஞ்சமாட்டார்கள்.

கருத்து

கற்புடைய கைம்மை மகளிரும் , துறவோர்களும், வீரரும் இறப்பதற்கு அஞ்சாது மானத்தை நிலைநாட்டுவர்.

அருஞ்சொற் பொருள்

கலன் - தாலி, ஐந்து புலன் ஒருங்க - ஐந்து புலன்களையும் அடக்கிய, பொய்கடிந்தார் -பொய்யை நீக்கிய துறவியர், கொலை ஞாட்பின் - கொலை செய்யும் போரில், மொய்ம்புடை - வலிமை மிக்க, முரண்மறலி - மாறுபாட்டை உடைய எமன், தும்பை - உயிர் கொள்ளச் சினத்தோடு வந்தாலும், அஞ்சார் - அஞ்ச மாட்டார்கள்,

42

"புழுநெளிந்து புண்அழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு."

பொருள்

புழு உண்டாகிப் புண் ஏற்பட்டு அதிக தூரம் நாற்றம் உடைத்ததாகத் தோன்றும் தன்மை உடையதாக இருந்தாலும், அத்தகைய உடம்பின் இறப்பை எண்ணி வீணர் அச்சத்தால் பெருமூச்சு விடுவர். உண்மையான பயனை அறிந்தவர்கள் உடல் என்னும் சுமையை இறக்குவதற்கு மனம் வருந்த மாட்டார்கள்.

கருத்து

அறிவற்ற வீணர் இறப்பிற்கு அஞ்சுவர். அறிவுடையோர் இறப்பிற்கு அஞ்சமாட்டார்கள்.

அருஞ்சொற் பொருள்

யோசனை - அதிக தொலைவு, கழிமுடை நாற்றம் - மிக்க புலால் நாற்றம், விழலர் - வீணர், விளிவுன்னி - இறத்தலை நினைந்து, மெய்ப்பயன் - உடம்பின் உண்மைப் பயன், சுளியார் - வெறுக்கமாட்டார். சுமை - உடல்.

43

"இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப - இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செயும்
நீர்வழிப் பட்ட புணை."

பொருள்

நீரோட்டத்தின் வழியே மிதந்து செல்லும் தெப்பம் போல, மன்னன் இகழ்ந்தால் மக்களும் அதனை இகழ்வர். மன்னன் ஒன்றைப் புகழ்ந்தால் மக்களும் அதனைப் புகழ்வர். எனவே போர் சிறப்புடைய மன்னன் எவ்வழி செல்கின்றானோ அவ்வழியே மக்களும் செல்வர். அவர்கள் வேறு என்ன செய்வார்கள்?

கருத்து

மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்.

அருஞ்சொற் பொருள்

இகழி - இகழ்தல், இறைமகன் - மன்னன், இகல் மன்னன் - போர் மன்னன், சீர்வழி - பெருமை மிக்க வழி, மன்பதை - மன்னுலகம், புணை - தெப்பம்.

44

“செவிசுடச் சென்றாங்கு இடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா - கவுண்மதத்த
கைம்மா வயத்ததோ பாகுமற்று எத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு.”

பொருள்

மன்னனின் செவி சுடும்படியாக அவனிடம் சென்று இடித்துரைத்து அமைச்சர் கள் அறிவுரை கூறுவார்கள். அவன் வெகுண்டாலும் தாம் அறம் கூறுவதிலிருந்து விலக மாட்டார்கள். மதம் உடைய யானையை அடக்கும் பாகன் அதனை அடக்கு வானே அன்றி அதன்வழி செல்ல மாட்டான். அதுபோலவே அமைச்சர்களின் மாண்பும் அமையும்.

கருத்து

அரசன் முறை தவறி நடந்தால் அமைச்சர்கள் அறம் கூறித்திருத்த வேண்டும். அவனை விட்டு அகலக் கூடாது.

அருஞ்சொற் பொருள்

செவிசுட - செவி வருந்தும்படி, வெகுளினும் - சினந்தாலும், வாய்வெரீஇப் பேரா - அறிவுரை கூறுவதிலிருந்து விலகமாட்டார்கள், கவிழ் மதத்த - மதநீர் சொரிகின்ற, கைம்மா - யானை, பாகு - பாகன், அம்மாண்பினவே - அத்தகைய தன் மையுடையரே.

45

“கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியாது உரையற்க - ஒவ்வொருகால்
எண்மைய னேனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னான்.”

பொருள்

அமைச்சர்கள் தமக்கு அரசன் உடன்பட்டு விடுவான் என்று எண்ணி, தாம் விரும்பியவற்றை அவனிடம் சொல்வதற்குரிய காலத்தை அறியாது சொல்வதை விட்டுவிட வேண்டும். அரசன் எளிமையாக இருந்தாலும் அருமை உடையவன். எப்பொழுதும் கண்ணோட்டம் இல்லாதவன். உள்ளத்தில் அவனுக்கும் சனம் உண்டு.

கருத்து

தக்க சமயத்தை அறிந்தே அமைச்சர்கள் அரசனுக்கு அறிவுரை கூற வேண்டும். இல்லையென்றால் அரசன் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

அருஞ்சொற் பொருள்

கைவரும் - நம்வழியில் வருவான், காதலித்த - தான் விரும்பியதை, செவ்வி - தக்க நேரம், எண்மையனேனும் - எளியவனாய் இருப்பினும், அரியன் - அருமை உடையவன் ஆவான், கண்ணலன் - கண்ணோட்டம் இல்லாதவன், உள்வெயர்ப்பி னான் - உள்ளத்தே சினமுடையவன்.

46

“பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார் - வெகுளின்மன்
காதன்மை உண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு”

பொருள்

ஒரு மன்னனுக்குக் கோபம் வருமானால், கோபம் வருவதற்குக் காரணமான வரைத் தன்பால் தொன்று தொட்டுப் பணியாற்றி வருபவர் என்ற தகுதியை எண்ணிப் பார்க்க மாட்டான். தனக்கு நண்பர் என்பதையும் கவனிக்க மாட்டான். மேலும் தமக்கு உரியவர் என்பதையும் நினைக்க மாட்டான். எனவே அரசியலில் மேம்பட்டவருக்கு அன்பும் உண்டோ? (இல்லை) மன்னனுக்கு அயலவர் என்றும் அன்புடையவர் என்றும் எப்பொழுதும் ஒருவர் இருக்க இயலாது.

கருத்து

என்றைக்கும் ஒரே மாதிரியாக ஒருவர் மன்னனிடம் உரிமை கொள்ள முடியாது.

அருஞ்சொற் பொருள்

பழமை - தொன்று தொட்டு வரும் பணியாளர், கேண்மை - நட்பு, கிழமை - உரிமை, வெகுளி - கோபம், இறைமாண்டார்க்கு - அரசியலில் மேம்பட்டார் (மன்னன்), ஏதிலர் - அயலவர், ஆர்வலர் - அன்புடையவர்.

47

"மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டுமென் றெள்ளற்க - பன்னெடுநாள்
காத்தவை எல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செய்யும்."

பொருள்

மன்னரின் தலைவாயிலைக் காத்தலால் யாதொரு பயனும் இல்லை என்றும், எந்த நன்மையைக் கண்டோம் என்றும் - காத்தல் தொழிலை இகழ்ந்து கைவிட்டு விடக் கூடாது. பலநாட்கள் காத்தல் செய்தமை கடைசியில் கைகொடுத்து உதவும். அத்துடன் அரசனின் சபையில் நல்ல நன்மையையும் தரும்.

கருத்து

அரசியலில் தளர்வின்றிப் பணி புரிந்தால் நன்மை கிடைக்கும்.

அருஞ்சொற் பொருள்

புறங்கடை - தலைவாசல், வறிதே - யாதொரு பயனும் இல்லை, எள்ளற்க - இகழற்க, கடைமுறை - கடைசியில், வேத்தவையின் - அரசியலில்.

48

"உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப - இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில."

பொருள்

நன்மை தருகின்ற செயல்கள் முடிவு பெறாவிட்டாலும் தாம் இறக்கும்வரை சான்றோர்கள் முயல்வார்கள். எவ்வாறெனின் அழியும் உயிர்க்கு ஆயுளை நீடிக்கச்

செய்யும் மருந்தைக் கொடுப்பது தீது ஆகாதது போலதாகும். எனவே இறுதிவரை முயன்றால் முடியாதனவும் முடிவதுண்டு.

கருத்து

எச்செயலையும் இறுதிவரை முயன்று செய்ய வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

உறுதி பயப்ப - நன்மை தருகின்ற செயல்கள், கடைபோகா வேனும் - முடிவு பெறாவிட்டாலும், இறுவரை காறும் - தான் இறக்கும் காலம் வரையிலும், முயல்வ - முயற்சி செய்வர், மருந்து ஒழுக்கல் - மருந்து கொடுத்தல், ஆவனவும் - ஆகாதன ஆதலும் உண்டு.

49

"முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்திறத்த என்னார் - மயலாயும்
ஊற்றம்இறு விளக்கம் ஊழுண்மை காண்டுமென்று
ஏற்றார் எறிகால் முகத்து."

பொருள்

அறிவுடையவர்கள் நல்ல பயன் தரும் செயல்களை முயன்று செய்ய வேண்டாம், ஊழ்வினையால் அவை வந்தே தீரும் என்று எண்ணி, முயற்சி செய்வதைக் கைவிட மாட்டார்கள். எதுபோல என்றால் விளக்கு ஏற்றுகிறவர்கள் மயங்கி எண்ணெய் திரி உள்ளிட்டவை இல்லாமல் ஊழால் விளக்கு எரியும், அதனைக் காண்போம் என்று எண்ணிக் காற்று வீசும் இடத்தில் விளக்கு ஏற்ற மாட்டார்கள் (எண்ணெய் திரியிட்டுப் பாதுகாப்பாகவே விளக்கு ஏற்றுபவர்கள் விளக்கை ஏற்றுவார்கள்).

கருத்து

ஊழின்படிதான் அனைத்தும் நடக்கும் என்று சான்றோர் முயற்சி செய்யாமல் இருக்க மாட்டார்கள்.

அருஞ்சொற் பொருள்

முயலாது வைத்து - முயற்சி செய்யாமலே இருந்து, முயற்றின்மை - முயற்சியின்மை, ஊழ்திறத்த உயலாகா - ஊழின்வழி நன்மைகள் தப்பமாட்டா, மயலாயும் - மயங்கியும், ஊற்றம்இறு விளக்கம் - எண்ணெய், திரி இவற்றால்

வன்மை உடைய விளக்கு, ஊழுண்மை காண்டுமென் - ஊழ்வினை இருப்பதைப் பரிசோதிப்போம் என்று, எறி - காள் - முகத்து - வீசும் காற்றிடத்து, ஏற்றார் - ஏற்ற மாட்டார்கள்.

50

"உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி."

பொருள்

ஒருவர் தன் முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டு செயல் புரிந்தால் ஊழின் வலிமையை அழிக்கின்ற திறன் அவர்க்கு ஏற்படும். இதற்கு உதாரணம் உலகம் அறியும்படி ஊழின் முளையைத் தின்று எமனின் உயிர் குடித்த மார்க்கண் டேயன் என்ற சிறுவனாவான்.

கருத்து

தக்கபடி முயற்சி செய்தால் ஊழையும் வெல்லலாம்.

அருஞ்சொற் பொருள்

உலையா முயற்சி - துன்பங்களுக்கு மயங்காத முயற்சி, களைகணா - பற்றுக்கோடாகக் கொண்டால், ஊழின்வலி சிந்தும் - ஊழின் வலிமை அழியும், பான்முளை - ஊழின் முளை, மறலி - எமன், கான்முளை - மார்க்கண்டேயன், கரி - உதாரணம்.

51

"காலம் அறிந்தாங்கு இடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து - மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும்"

பொருள்

ஒருவர் முயற்சி செய்யும் பொழுது காலம் அறிந்து, அதற்குரிய இடம் அறிந்து, செய்யப் படும் செயலின் அடிப்படையை அறிந்து, அதன் பயனை அறிந்து, ஆராய

வேண்டியவற்றை ஆராய்ந்து, துணையின் வலிமை அறிந்து முயற்சி செய்ய வேண்டும்.

கருத்து

ஒரு செயலைச் செய்யும் பொழுது கால நிலைகளை அறிந்து செய்ய வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

செய்வினையின் மூலம் - செய்யப்படும் செயலின் அடிப்படை (அடிப்படை), விளைவு - பயன், சூழ்வன சூழ்ந்து - ஆராய வேண்டியவற்றை ஆராய்ந்து, துணைமை - உதவி செய்பவர், ஆள்வினை - முயற்சி.

52

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்?"

பொருள்

எடுத்த செயலைச் செய்து முடிக்கும் முயற்சி உடையவர் உடம்பின் வருத்தத்தைப் பார்க்க மாட்டார்கள். பசியை நோக்க மாட்டார்கள், உறங்க மாட்டார்கள், பிறர் செய்யும் தீங்கை நினைக்க மாட்டார்கள். காலத்தின் அருமை யையும் எண்ண மாட்டார்கள். பிறரால் ஏற்படும் அவமதிப்பையும் கொள்ள மாட்டார்கள்.

கருத்து

முயற்சி செய்து செயலை முடிக்கக் கருதும் ஒருவர் அதிலேயே குறியாக இருப்பர். எத்தீமையையும் நோக்க மாட்டார்.

அருஞ்சொற் பொருள்

மெய் - உடம்பு, எவ்வெவர் - பிறர், செவ்வி - காலம், கருமம் - செயல்.

53

“சிறிய பகைஎனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர் - நிறைகயத்து
ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண்பு அரிது”

பொருள்

முயற்சி செய்பவர் சிறிய பகை எனினும் அதனை நீக்காமல் இருக்க மாட்டார் கள். ஏனென்றால் அதனால் பெரும் பிழை ஏற்படும். நீர் நிறைந்த குளத்தின் நடுவில் தவளை குதித்தால், அதுவரை நீரில் தெரிந்த யானையின் நிழல் கூடத் தெரியாமல் அழிந்து விடுவது போல, பிழை ஏற்பட்டு அழிந்து விடும்.

கருத்து

முயற்சியின் போது சிறிது பிழை ஏற்பட்டாலும் அதனை நீக்க வேண்டும். இல்லையென்றால் பெரும் பிழை ஏற்பட்டு விடும்.

அருஞ்சொற் பொருள்

ஓம்புதல் தேற்றார் - நீக்குதலை அறியாதவர்கள், பிழைபாடு - குற்றம், நிறைகமம் - நிறைந்த குளம், தாழ்நீர் - அதன் தாழ்ந்த நீரில்.

54

“புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப - அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
காலும் காமப் பகை”

பொருள்

முயற்சி செய்பவர்கள் வெளியில் உள்ள புறப் பகையானது கோடிக்கு மேல் இருந்தாலும் அதற்கு அஞ்ச மாட்டார்கள். அதே வேளையில் உட்பகை ஒன்று இருக்குமானால் அது தரும் துன்பத்தைக் கருதி அதற்கு அஞ்சி, அதனிடம் இருந்து தம்மைக் காத்துக் கொள்வார்கள். யார் போல என்றால் அனைத்து உலகத்தையும் தம்முடைய ஒரே சொல்லினால் வயப் படுத்துகின்ற முனிவர்கள், பலவழியில் பலமுறை வரும் உட்பகையான காமத்தை வருந்திக் காவல் செய்து தம்மைக் காத்துக் கொள்வதைப் போன்றதாகும்.

கருத்து

புறப்பகையைக் காட்டிலும் உட்பகைக்கு அஞ்ச வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

புறப்பகை - வெளிப்பகை, அகப்பகை - உள்ளே பகையை உடையவர், யாப்பார் - கட்டுபவர், பரிந்து ஓம்பி - வருந்திக் காப்பர், காமப்பகை - பெண் காமமாகிய பகை.

55

"புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டும் - கழிபெருங்
கண்ணோட்டம் செய்யார் கருவியிட்டு ஆற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து"

பொருள்

புறத் தோற்றத்தில் நட்புடையவர் போல் தோன்றி, உள்ளத்தில் நஞ்சு போன்ற பகைமை வைத்திருப்பவரைக் கண்டு வெளிப்படுத்தி, அவர்களை நீக்க வேண்டும். எதுபோல என்றால் உடம்பில் ஏற்பட்டிருக்கும் புண்ணை நீக்க வேண்டும் என்றால், புண் மீது கருணை கொள்ளாது புண்ணை அறுத்து ஆற்ற(நீக்க) வேண்டும். அப்புண்ணை மூடிவைத்திடக் கூடாது போன்றதாகும்.

கருத்து

உட்பகையைக் கண்டு விலக்கிவிட வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

புறநட்டு - புறத்தே நட்புச் செய்து, அகம்வேட்பார் - மனதில் வெறுப்பவர், நச்சுப் பகைமை - உள்ளத்தில் நஞ்சு போன்ற பகைமை உடையவர், வேறாதல் - நீக்குதல், களிபெரும் கண்ணோட்டம - மிகுந்த கருணை, கருவியிட்டு ஆற்றுவார் - கருவியால் அறுத்து ஆற்றுவார், பொதிந்து - மறைத்து.

56

"நட்பிடைக் குய்யம்வைத்து எய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமாம்
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து."

பொருள்

நட்பினிடத்திலே வஞ்சனை செய்து, பிறரால் அறியப்படாத தீய செயல்களைச் செய்யத் துணிந்து, பகைவர்க்குச் சார்பாகி இருப்பவர்க்கு உறுதியாக வாழ்நாள் முடிவுற்றதாகும். (வாழ்ந்தாலும் இறந்தாரை ஒப்பர், யமன் ஏன் அவர்களின் உயிரைக் கொல்லவில்லை என்றால்) யமன் தன்னுடைய நடுநிலை இழந்தமையால் அவர்களை மறந்து வாளா (சும்மா) கிடந்தால்.

கருத்து

யமன் மறந்து செயல்படுவதால் வஞ்சகர்கள் வாழ்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

குய்யம்வைத்து - வஞ்சனைசெய்து, எய்யவினை - பிறரால் அறியப்படாத தீய செயல்கள், வட்கார் - பகைவர், திறத்தராய் - பகைவரைச் சார்ந்தாராய், திட்பமா - உறுதியாக, நாள்உலந்த - வாழ் நாள் முடிவுற்றது, நடுவன் - யமன், நடுவின்மை - நடுவு நிலைமை, வாளா - சும்மா.

57

"மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தெவையும் தீயவே யாகும் - எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே
மாசில் மனத்தி னவர்."

பொருள்

ஒருவனுக்கு மனதில் குற்ற நினைவுகள் இருக்குமானால், பிறர் அவனுக்கு நல்லவை செய்தாலும் அவை அனைத்தும் தீயனவாகவே தோன்றும். குற்றமில்லாத மனத்தை உடையவர்க்குப் பிறர் எத்தகைய தீமைகளைச் செய்தாலும் அவை நல்லதாகவே காண்பர்.

கருத்து

தீயவர்க்கு யாவையும் தீயவையாய்த் தெரியும். நல்லவர்க்கு அனைத்தும் நல்லவையாகவே தெரியும்.

அருஞ்சொற் பொருள்

கறுப்பெனின் - குற்றங்கள் இருக்குமானால், மாசின் மனம் - குற்றமில்லாத மனம்.

58

“இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியும் மொழியும் கடுவே - அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்”

பொருள்

நல்லவர்கள் எத்தகைய கடுஞ்சொல்லைச் சொன்னாலும் அவை இனிய சொல்லேயாகும். பகைவர்கள் எவ்வளவு இனிய சொற்ளைச் சொன்னாலும் அவை விஷத்திற்கு ஒப்பானவையாகும். தீப்போன்று சுடும் வெங்காரம் என்ற மருந்துச் சரக்கு வெம்மையானது என்றாலும் நோயினைத் தீர்க்கும். விஷமானது உடம்பில் குளிர்ச்சி தோன்றும்படி இருந்தாலும் அது உயிரைக் கொன்றுவிடும்.

கருத்து

ஒருவர் சொல்லும் சொற்களின் பயனைத்தான் கருத வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

இனியவர் - நல்லவர், இன்னார் - பகைவர், கனியும் மொழி - இனிய சொல், கடுவே - விஷம்போன்றது, அனல் கொழுத்தும் - தீப்போல் சுடும், வெங்காரம் - ஒருவகை மருந்து, வெய்து - வெப்பம் உடையது, மெய்பொடிப்ப - உடம்பு குளிரம் படியாக, சிங்கி - விஷம்.

59

“பொய்குறளை வன்சொல் பமயினலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து - மெய்யில்
புலமைந்தும் காத்து மனமாசு அகற்றும்
நலமன்றே நல்லாறு எனல்”

பொருள்

பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்ற சொல் என்ற நான்கு குற்றங்களும் வாராமல் சொல்லைக் காத்து, உடம்பில் ஐந்து புலன்களையும் அடக்கிக் காத்து, மனதில் குற்றத்தை அகற்றி செய்கின்ற நல்ல செயல்கள் தாம் நன்னெறி எனக் கூறப்பெறும்.

கருத்து

நன்னெறிக்குரிய பண்புகளை அறிந்து நடக்க வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

குறளை - புறங்கூறல், வன்சொல் - மனதைப் புண்படுத்தும் கடுஞ்சொல், எய்தாமை - நிகழாமல், வழுக்காத்து - குற்றம் காத்து, மெய் - உடம்பு, ஐந்து புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி, மனமாச கற்றும் - மனதில் எழும் குற்றங்களை நீக்கி, நல்லாறு - நற்காரியம்.

60

"நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்கு ஒருப்படார் - பல்பொறிய
செங்கண் புலிஏறு அறப்பசித்தும் தின்னாவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்"

பொருள்

நல்வழியில் செல்கின்றவர்கள் வறுமை அடைந்தாலும் பாவச் செயல்களைச் செய்வதற்கு உடன்பட மாட்டார்கள். எதுபோல என்றால் உடம்பில் பல புள்ளிக ளையும், சிவந்த கண்களையும் கொண்ட ஆண் புலியானது மிகவும் பசித்தாலும் பசுமையான நிலத்தில் விளைந்த பயிரைத் தின்னாது.

கருத்து

அறிவுடையோர் வறுமையிலும் பாவத்தைச் செய்யார்.

அருஞ்சொற் பொருள்

நல்லாறு - நல்வழி, ஒழுக்கு - ஒழுக்கம், நல்கூர்ந்து - வறுமை அடைந்து, அல்லன - நன்மை அல்லாத பாவச் செயல்கள், ஒருப்படரர் - உடன் படார், பொறி -

புள்ளி, செங்கண் - சிவந்த கண், அறப்பசித்து - மிகவும் பசித்தாலும், பைங்கண் புனம் - பசுமையான நிலம், பைங்கூழ். - பசுமையான பயிர், (*புல்*)

61

“குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளும் திருவும் - தவம்விறறாங்கு
ஊனோம்பும் வாழ்வும் உரிமைவிற்று உண்பதூ&-15
தானோம்பிக் காத்தல் தலை”

பொருள்

ஒருவன் தன் குல ஒழுக்கத்தை விற்றுத் தேடிக் கொள்ளும் செல்வமும், வாய்மையாகிய நலத்தை விற்றுக் கொள்ளும் செல்வமும் (பொய்சொல்லி), தவத்தை அழித்து உடலைப் பாதுகாக்கும் வாழ்வும், மனைவியை விற்று உண்பதும் (என்ற இவையெல்லாம்) தம்பால் வாராதபடி காத்துக் கொள்வது அறங்கள் எல்லா வற்றிலும் மிகச் சிறந்ததாகும்.

கருத்து

செல்வத்தைச் சேர்ப்பதற்காகக் குலம், வாய்மை, தவம், உரிமை இவற்றைக் கைவிட்டு விடக் கூடாது.

அருஞ்சொற்பொருள்

குலம் - குல ஒழுக்கம், வெறுக்கை - செல்வம், திரு - செல்வம், ஊன் ஓம்பும் - உடம்பைப் பாதுகாத்தல், உரிமை - மனைவி.

62

“இடைதெரிந்து அச்சுறுத்து வஞ்சித்து எளியார்
உடைமைகொண்டு ஏமாப்பார் செல்வம் - மடநல்லார்
பொம்மன் முலைபோல் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்.”

பொருள்

தம்மைவிட எளியவர் சோர்ந்து இருக்கும் சமயத்தை அறிந்து, அவர்களை அச்சப் படுத்தி, ஏமாற்றி வஞ்சனையால் அவர்களின் உடமையைக் கவர்ந்து கொண்டவரின் செல்வம், பெண்களின் முலைகளின் வடிவம் வளர்வது போல்

வளர்ந்தாலும், அப்பெண்களின் சிறிய இடையைப் போல் பின்னர் மெலிந்துவிடும் (குறைந்துவிடும்)

கருத்து

பிறரை ஏமாற்றி வஞ்சனையால் சேர்க்கும் செல்வம் அழிந்து விடும்.

அருஞ்சொற்பொருள்

இடை - சோர்ந்திருக்கும் சமயம், ஏமாப்பார் - ஏமாற்றுபவர், மடநல்லார் - மடமைத் தன்மை உடைய பெண்கள், பொம்மல் - பருத்த, பருத்திடினும் - வளர்ந்திடினும், நுண்ணிடை - மெல்லிய இடுப்பு.

63

"பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க்கு ஆக்கம் அரிதம்மா - முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயாது இரா"

பொருள்

தனக்குக் கிடைத்த பொருளைக் குறைந்தது என்றும், கிடைக்காத பொருளைப் பெரியதாய் எண்ணிக், கிடைக்காத பொருளுக்குப் பேராசை கொள்ளும், சிறிய உயிர்களுக்குச் செல்வத்தால் உடைய நன்மை ஏற்பட மாட்டாது. (உள்ள பொருளும் அழிந்துவிடும்) எதுபோல என்றால் விறகினைப் போடப்போட அதனைப் பற்றி அழித்து எரிகின்ற தீயும், கடைசியில் எரிந்து அழியாமல் இருப்பதில்லை. (அழிந்து விடும்)

கருத்து

பேராசை கொள்பவன் ஆக்கத்தைப் பெறுவதில்லை (வளப்பத்தை) பெற்றிருப் பதையும் காலப்போக்கில் இழந்து விடுவான்.

அருஞ்சொற் பொருள்

பெற்ற - தாம் பெற்ற செல்வம், சிறுக - சிறியதாக எண்ணி, பெறாத பெரிது ள்ளும் - பெறாத பெரும் பொருளுக்கு பேராசை கொள்ளும், ஆக்கம் - வளர்ச்சி பெறும் நலம், அரிதமமா - அரிதாகி விடும் (இல்லையாகி விடும்) வரவர வாய்மடுத்து - விறகினைப் போடப் போட அதனைப் பற்றி எரிந்து, வல்விராய - வலிமையான விறகு, மாய - அழிய, எரிதழல் - நெருப்பு.

64

"தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாளுன்றி - எய்த்தும்
அறங்கடையில் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்"

பொருள்

தங்கள் நிலைமைக்கும், குடிப்பிறப்பிற்கும் தவறாது அவற்றிற்கு ஒப்பக் கடமையோடு முயற்சி செய்து, மறந்து பாவவழியில் செல்லாது, பிறர் பொருளுக் கும் ஆசைப்படாது வாழ்கின்றவர்கள் வீட்டு வாசலில் செல்வம் மிகுதியாகச் சேரும்.

கருத்து

பாவ வழியில் செல்லாது தம் நிலைக்கு ஏற்ப முயற்சி செய்தால், முயற்சிக்கேற்ற பொருள் தவறாது சேரும்.

அருஞ்சொற் பொருள்

குடிமை - குடிப்பிறப்பு, ஒத்த கடப்பாட்டில் - தன்நிலை குடிமை ஆகிய வற்றிற்கு ஒப்ப ஒத்த கடமைப்பாட்டில், தாள்ஊன்றி - முயற்சிசெய்து, எய்த்தும் - மறந்தும், அறங்கடையில் - பாவ வழியில், வெஃகார் - ஆசைப்படாமல், புறங்கடை - வீட்டு வாசல்.

65

"பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம் - கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போல் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்."

பொருள்

தலைமை சான்றவரின் பொருள்கள் பொதுமகளிரைப் போல் (விலை மகளிர்) எல்லோருக்கும் பயன்படும். இடைப்பட்டவரின் பொருள்கள் கற்புடை மகளிர் போல் தன்னை உடையவருக்கே பயன் படும். கடைநிலையாளரின் பொருள்கள் தாலியை இழந்த கைம்மை நோன்பு கொண்ட பெண்ணின் அழகுபோல் யாருக்கும் பயன் படுவதில்லை.

கருத்து

செல்வம் அனைவருக்கும் பயன்பட வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

பொதுமகள் - காசுக்கு உடலை விற்கும் விலைமகளிர், குல மகளிர் - கற்புடைய பெண், ஏனையோர் - இடைப்பட்டவர், கலன் அழிந்த - தாலியை இழந்து, கைம்மையார் - கைம்மை நோன்பு உடையவர்.

66

**"வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல - கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்"**

பொருள்

ஈகைக்குணம் இல்லாதவனின் செல்வத்தை விட, ஈகைத்தன்மை உடையவனின் வறுமையே மிகவும் நல்லது. ஏனென்றால் அந்த வறியவன் - அருள் உள்ளம் இல்லாதவன். அன்பில்லாவன். கருணை இல்லாதவன் என்று பிறரால் இகழப்படுவதில்லை.

கருத்து

ஈகைக்குணம் இல்லாதவன் அருளிலன், அன்பிலன், கருணை இலன் என்று பிறரால் இகழப்படுவான்.

அருஞ்சொற்பொருள்

வள்ளன்மை - ஈகைக்குணம், மற்றையோர் - ஈகைக்குணம் உடையவன், நல்குரவு - வறுமை, நனிநல்ல - மிகவும் நல்லது, கண்ணறையன் - கருணை இல்லாதவன்.

67

**"ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓஓ கொடிது கொடிதம்மா - நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்ப்பூட் டிடப்படின்மற்று
ஆவா இவரென்செய் வார்."**

பொருள்

ஒருவன் பிறருக்குச் செல்வத்தைக் கொடுக்க முடியாதவனாக இருந்தாலும், இனிய சொற்களால் கூறுவதில் வறுமை கொள்ளுதல் மிகவும் கொடியதாகும். பாவம் என்ற கொல்லனால் நாக்கினைப் பேச முடியாத வண்ணம் சிதைத்து, வாய்பூட்டுப் போட்டு விட்டால் இனிமையான சொல்லைச் சொல்ல முடியாதவர்கள் என்ன செய்வார்கள்? ஐயோ பாவம். (இரக்கத்திற்கு உரியவர்கள்)

கருத்து

வள்ளன்மை இல்லை என்றாலும் பிறர்பால் இன்சொற்களையாவது கூற வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

ஈகை - கொடுக்கும் தன்மை, நல்கூர்தல் - வறுமை அடைதல், நாகொன்று - நாக்கினை வருத்தி, தீவினை கம்மியனால் - பாவமாகிய கொல்லனால், ஆவா - ஐயகோ, என்செய்வார் - இன் சொல்லால் கூறாதவர் மேல் தவறில்லை, அவர் செய்த தீவினைதான் அதற்குக் காரணம்.

68

"செல்வன்மை உண்டெனின் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல - வல்லைத்தம்
ஆக்கம் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்"

பொருள்

ஒருவருக்குச் சொல்வன்மை இருக்குமானால் அதனைப் பயன் படுத்தாது இருத்தல் நல்ல செயலை அழிப்பது போன்றதாகும். வேறில்லை. சொல்வன்மை யின் பயனை அறிந்தவர்கள் விரைவாகத் தம் செல்வம் கெடுவது என்றாலும், அதற்கு அச்சம் கொள்வதில்லை. (சொல் வன்மையைப் பயன்படுத்துவர்)

கருத்து

சொல்வன்மையைப் பயன்படுத்தாது விடுதல் தவறாகும்.

அருஞ்சொற்பொருள்

கொன்னே - வீணே, (அதன் பயனை அனுபவிக்காது), கோறல் - அழித்தலாகும், வல்லை - விரைவாக, தம்ஆக்கம் - தம்செல்வம், வாக்கு - சொல்வன்மை.

69

"சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார் - அறனல்ல
எண்மைய ஆயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார்"

பொருள்

சிறிய முயற்சியைச் செய்து பெரும் பயன் கிடைக்கும் என்றால், அச்சிறு முயற்சியே செய்யப் பின்வாங்க மாட்டார்கள். (யார் என்றால்) செய்வதற்கு எளிமையாக இருந்தாலும், அறத்திற்கு மாறுபட்டதைச் செய்யாது, அரியதாக இருந்தாலும் அறநெறியில் விலகாது, முயற்சி செய்து பயனை அடையும் நல்லவர்.

கருத்து

அறத்திற்கு மாறாக முயற்சி செய்யாதவர்கள் சிறிய முயற்சி செய்தாலும் பெரிய பயனை அடைவர்.

அருஞ்சொற் பொருள்

உறுபயன் - மிக்க செல்வம், தாழ்வரோ - முயற்சி செய்யத்தாமதிக்க மாட்டார்கள். அறனல்ல - அறமல்லாத பாவச் செயல்கள், எண்மையவரயினும் - எளியதாய் இருப்பினும், அறிவு எனினும் - செய்வதற்கு அரிதாக இருந்தாலும், ஓண்மையில் தீர்ந்து - அற்த்தினின்று நீங்கி.

70

"செயக்கடவ அல்லனவும் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னாம் - செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று."

பொருள்

ஒருவன் தம்மால் செய்ய முடியாதவற்றைச் செய்து முடிப்பேன் என்று கூறும், (பிறரை ஏமாற்றும்) நாகரிகம் என்ன பயனைத் தரும்? அவ்வாறு ஏமாற்றும் செயல் - கோபித்துச் சொன்னால் ஒருவனின் மனம் வருந்தும் என்று எண்ணி, அவன் தலையை வெட்டி விடுகின்ற கருணையைப் போன்றது என்று கூசாமல் சொல்வது போன்றதாகும்.

கருத்து

தன்னால் செய்யக் கூடிய செயல்களைத்தான் கூற வேண்டும். செய்ய முடியும் என்ற செயலைச் செய்யாது விடுத்தல் தவறாகும்.

அருஞ்சொற் பொருள்

செய்யக்கடவ அல்லனவும் - தம்மால் செய்ய முடியாதவற்றை, நயத்தகு நாகரிகம் - விரும்பப் படுகின்ற குணம், செயிர்த்து - கோபித்து, நெஞ்சுநோம் என்று - நெஞ்சு வருந்தும் என்று, துமிப்பான் - வெட்டுபவன், எடுத்துரைக்கற்பாற்று - எடுத்துரைக்கும் தன்மை.

71

"அல்லன செய்யினும் ஆகுலம் கூழாக்கொண்டு
ஒல்லாதார் வாய்விட் டுலம்புப் - வல்லார்
பிறர்பிறர் செய்பபோல செய்தக்க செய்தாங்கு
அறிமடம் பூண்டுநிற் பார்"

பொருள்

தீயனவற்றைச் செய்தாலும் வன்மை இல்லாதவர் (திறமை இல்லாதவர்) நல்லவற்றைச் செய்ததைப் போல ஆரவாரம் கொண்டு முழக்கம் இடுவர். (ஆனால்) திறமை உடையவர் பிறர் செய்யக் கூடியவற்றையும் தாம் செய்து, அதனால் பயன் கிடைத்தாலும் அப்பயனை உணராத அறிவற்றவர் போல் அமைதியாக இருப்பர்.

கருத்து

திறமை உடையவர் ஆரவாரம் கொள்ளார். திறமையற்றவர் ஆரவாரம் செய்வர்.

அருஞ்சொற்பொருள்

அல்லன - தீயவற்றை, ஆகுலம் கூழாகக் கொண்டு - ஆரவாரத்தையே பயனாகக் கொண்டு, ஒல்லாதார் - திறமை இல்லாதார், புலம்புப - முழக்கமிடுவர், செய்தக்க - செய்யக் கூடியவற்றை, அறிமடம் - அறிந்திருந்தும் அறியாதவர் போல்.

72

"பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான் - பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்து கொல்வான்போல்
கைவிதிர்த் தஞ்சப் படும்."

பொருள்

தனக்குப் பகைவராய் இல்லாதிருந்தும், அவர்தம் குறைகளை ஒருவன் பரப்பி, அதனைப் பயனாகக் கொள்ளும் மகிழ்ச்சியை உடைய மூடன், வழிச்செல்வோரின் உடல் துடித்தலைக் காணும் பொருட்டு, அவர்தம் கன்னத்தில் அடித்து வருத்தும் இயல்புடையோன் போல் கருதப்பட்டு பிறரால் அஞ்சப்படுவான்.

கருத்து

பிறருடைய பழியை வேண்டுமென்றே பரப்புகின்றவனைக் கண்டு உலக மக்கள் அஞ்சுவர்.

அருஞ்சொற்பொருள்

பகையின்று - தனக்கு யாதொரு பகையும் இல்லாதிருப்ப, நகை ஒன்றே - மகிழ்ச்சி ஒன்றையே கருதி, மெய்விதிர்ப்புக்காண்பான் - உடல் நடுக்கத்தைக் காண விரும்புபவன், கொடிறு உடைத்துக் கொல்வான் போல் - கன்னத்தில் அடித்து வருத்துபவன் போல், கை விதிர்த்து - நடுக்கத்துடன், அஞ்சப்படும் - அச்சம் கொள்வர்.

73

"தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலம் சொல்வார் பயன்"

பொருள்

தெய்வம் இருக்கிறது என்ற நம்பிக்கை உடையவர்கள் தீய செயல்களைச் செய்ய முனைந்தால், அவர்களை - அவர்கள் வணங்கும் தெய்வமே கருணை

இல்லாமல் முன்நின்று தண்டிக்கும். தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களுக்கு தெய்வம் முன்னே தோன்றுவதும் இல்லை, தண்டிப்பதும் இல்லை. (எதுபோல என்றால்) பெற்றோர் தம் அன்புக்குரிய மக்களுக்குப் பலமுறையும் நீதிகளை எடுத்துச் சொல்வது போன்றதாகும்.

கருத்து

இறை நம்பிக்கை உடையவர்க்கு இறைவன் துன்பத்தைத் தருவது அவர்களைத் திருத்தி நன்னெறிப் படுத்துவத

அருஞ்சொற்பொருள்

தீயசெயப்புகின் - தீய செயல்களைச் செய்தால், கண்ணின்று - முன்னின்று, ஒறுக்கும் - தண்டிக்கும், (துன்பத்தைத் தரும்), தெய்வம் இலது என்பார் - தெய்வ நம்பிக்கை இல்லாதவர், பலகாலம் - பலமுறையும், சொல்லுவார் - அறம் சொல்லுவார்.

74

“தீய செயல்செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல - தீயன
நல்லன ஆகாவாம் நாவின் புறநக்கிக்
கொல்லும் கவயமாப் போல்”

பொருள்

தீய செயல்களைப் செய்கின்றவர்களுடைய செல்வம் மேலும் மேலும் பெருகினாலும், அவை தீமையையே தரும். நற்பயனைத் தாராது. (எது போல என்றால்) நாக்கினால் நக்கி இன்பத்தை முதலில் தந்து பின் நக்கியவரைக் கொல்லும் காட்டுப் பசுவைப் போன்று தீமையே தரும். நல்லன தராது.

கருத்து

தீய செயல்களால் ஈட்டப்பட்ட செல்வம் தீமையைத் தான் தரும். நல்லதைத் தாராது.

அருஞ்சொற்பொருள்

ஆக்கம் - செல்வம், கவயமா - காட்டுப்பசு.

75

**"நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரின் கீழல்லர் - முன்னைத்தம்
ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்ளுடைவார்
தீய செயினும் சில."**

பொருள்

நன்னெறியில் செல்பவர்கள் நாவில் தழும்பு உண்டாகுமாறு நாள்தோறும் நல்லதையே எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் செம்மையான நெறியில் செல்லும் அறிஞர்களை விடத் தாழ்ந்தவர்கள் அல்ல. (அவர்களோடு ஒத்தவர்கள் தான்) மேலும் முன் ஊழ்வினையின் காரணமாகத் தீய செயல்களைச் செய்யவேண்டி வருமானால், அதனைச் செய்ய நாணுகின்றவர்கள், ஏதேனும் ஒரு காரணத்தால் அத் தீமையைச் செய்தாலும் அவர்கள் நல்லவர்களே ஆவர்.

கருத்து

நாளும் அறம் சொல்லுகின்றவர்கள் நற்செயல்களைச் செய்கின்றவர்களுக்கு ஒத்தவர் ஆவர் என்ற கருத்தும், ஊழ் வினையாலும் வரும் தீவினைக்கு அஞ்சுகின்ற அறிவுடையோர் ஏதோ ஒரு காரணத்தால் தீவினையைச் செய்தாலும், அவர்கள் அறிவுடையவர்கள்தான் என்ற கருத்தும் இடம் பெற்றுள்ளன.

அருஞ்சொற்பொருள்

நன்மக்கள் - அறிவுடையோர், நாள்வாயும் - நாள்தோறும், செந்நெறிச் செல்வாரின் - செம்மையான அறநெறியில் ஒழுகுபவரைக் காட்டிலும், முன்னைத்தம் ஊழ்வலி - தாம் தீமை செய்வதற்குக் காரணமான ஊழை நினைந்து, பழிநாணி - பழிச் சொல்லிற்கு அஞ்சுகின்றவர்கள், தீய செயினும் - தீயவற்றைச் செய்ய நேர்ந்தாலும்.

76

**"பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறன் அன்றே ஆயினுமாக - சிறுவரையும்
நன்னலத்த தாயினும் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க உள்நடுங்கு நோய்."**

பொருள்

பிறருடைய மனைவியை விரும்பி, அவர்தம் வீட்டு வாயிலில் சென்று நிற்பது அறமாகாது. பிறன் மனையாளித்டதில் பெறும் இன்பம் நொடிப்பொழுதேனும் இன்பம் தரும் என்றால் அதனை மேற்கொள்ளலாம், ஆனால் அது இன்பத்தைத் தராது உடலும் மனமும் நடுங்கும் வண்ணம் துன்பத்தையே தீரும். (எனவே செய்யற்க)

கருத்து

பிறர் மனைவியை விரும்பற்க. அது இன்பம் தராது துன்பமே தரும்.

அருஞ்சொற்பொருள்

பிறன்மனை நின்றாள் - பிறரது மனைக்கு உரியவள், (பிறன் மனைவி) கடைத்தலைச் சேறல் - அவள் இன்பத்தை விரும்பி அவள் வீட்டு வாயிலில் நிற்றல், சிறுவரையும் - சிறு பொழுதேனும், மெய் நடுங்க - உடல் நடுங்க, உள் நடுங்கு - மனம் நடுங்க, நோய் - துன்பம்.

77

“கருமம் சிதையாமே கல்வி கெடாமே
தருமமும் தாழ்வு படாமே - பெரிதுந்தம்
இன்னலமும் குன்றாமே ஏரிளங் கொம்பன்னார்
நன்னலம் துய்த்டல் நலம்.”

பொருள்

தாம் செய்ய வேண்டிய செயல்கள் தடைப்படாமலும், மேலும் மேலும் கற்க வேண்டிய கல்வி கெடாமலும், அறச் செயல்களுக்குக் குறைவு வராமலும், இல்லற நன்மை குறையாமலும், அழகான கொம்பு போன்ற மனைவியின் நல்ல இன்பத்தை அனுபவித்தல் யாருக்கும் குறையாகாது.

கருத்து

கடமைகளுக்குக் குறைவு வாராமால் மனைவியின் பால் இன்பத்தை அனுபவிக்கலாம்.

அருஞ்சொற்பொருள்

கருமம் - செயல்கள், தருமம் - அறச்செயல், இல்நலம் - இல்லத்தின் நலம், இளங்கொம்பு அன்னார் - அழகான கொம்பு போன்ற அழகு உடையவர்.

78

“கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவும் செய்வார் - பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமம் கதுவப்பட் டார்”

பொருள்

கொலை செய்வதற்கு அஞ்சமாட்டார்கள், பொய் சொல்வதற்கு அஞ்சமாட்டார் கள், மானத்தைக் காத்துக்கொள்ள மாட்டார்கள். களவு மட்டுமல்லாது எல்லாத் தீய செயல்களையும் செய்வர். பழி பாவம் உடையது என அஞ்ச மாட்டார். இத்தகைய செயல்களைச் செய்பவர்கள் வேறு என்னதான் செய்யமாட்டார்கள்? அவர்கள் யார் என்றால் மிகுந்த காமத்தைக் கொண்டவர்கள்.

கருத்து

மிகுந்த காமத்தைக் கொண்டவர்கள் எத்தீய செயல்களையும் செய்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

ஓம்பார் - காக்கமாட்டார்கள், பழி - தாழ்வு, காமம் கதுவப்பட்டார் - காமத்தில் மிக்க பற்றுடைய்வர்.

79

“திருவினு நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பார் - நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கின் சிலர்.”

பொருள்

இலக்குமியைக் காட்டிலும் அழகுடையவளாகத் தன் மனைவி இருந்தாலும் அவளை விடுத்து, பிறருடைய மனைவியின் மேல் காமம் கொண்டு, தன் பெருமை அழிந்து நிற்பார்கள். அவர்கள் எதுபோல என்றால் கொடிய விலங்குகள் இனிய

பொருள்களைத் தம் வாயில் பெற்றாலும், அதனை உமிழ்ந்துவிட்டுக் கசப்புள்ள பொருள்களைத் (மாமிசத் தசைகளைத்) தின்னுவது போன்றதாகும்.

கருத்து

காமம் மிக்கவர் அழகுள்ள தன் மனைவியை விட்டுவிட்டுப் பிறன் மனைவியையே விரும்புவர்.

அருஞ்சொற்பொருள்

பிறன் மனைக்கே - பிறர் மனைவிமேல் ஆசைப்பட்டு, பீடழிந்து - பெருமை அழிந்து, நறுவிய வாயின - நல்ல பொருள்கள் வாயில் இருந்தாலும், கடுத்தின்றும் _ கசப்பைத் தின்னுகின்ற.

80

"கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு - மக்கட்பேறு
என்பதோ ராக்கமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு"

பொருள்

கற்பு என்ற ஆடையை உடுத்தி , அன்பு என்ற மலரைச் சூடி, உடலில் நாணம் என்னும் நறுமணக் கலவையைப் பூசி, இல்லறத்திற்கு ஏற்ற நற்குணம், நற்செய்கை என்ற அணிகலன்களை அணிந்தவளுக்கு மக்கட்பேறு என்ற செல்வமும் உள்ளதானால் அவளை மனைவியாகக் கொண்ட கணவனுக்குச் செய்ய வேண்டிய தவம் வேறில்லை.

கருத்து

சிறந்த மனைவியைப் பெற்றவன் தவம் செய்தவன் ஆவான்.

அருஞ்சொற்பொருள்

பூண்டாட்கு - கொண்டவளுக்கு; மக்கட்பேறு - குழந்தை நலம், கொண்டார் - கொண்ட கணவன்.

81

“ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்த - வாய்ந்த
நயனுடை இன்சொல்லான் கேளெனினும் மாதர்க்கு
அயலார்மேல் ஆகும் மனம்"

பொருள்

தன் கணவன் அழகு மிக்கவனாக இருந்தாலும், இளமை உடையவனாக இருந்தாலும், இசையில் வல்லவனாக இருந்தாலும், பெண்களின் கண்களைக் கவர்கின்ற பார்வை உடையவனாக இருந்தாலும், இனிய சொல்லைப் பேசுபவனாக இருந்தாலும் கற்புக் குணம் இல்லாத பெண்களுக்கு மற்ற ஆடவர் மீது மனமானது செல்லும்.

கருத்து

கற்புக்குணம் இல்லாத மகளிர் தன் கணவன் சிறந்த நலன்களை உடையவ னாக இருந்தாலும் பிற ஆடவர் மீது விருப்பம் கொள்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

எழில் - அழகு, இசைவல்லான் - இசையில் வல்லவன், காந்தையர் - மகளிர், கேள் - கணவன், அயலார்மேல் - அடுத்த ஆண்கள்மீது.

82

“கற்பில் மகளின் நலம்விற் றுணவுகொள்ளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லார் - மற்றுத்தம்
கேள்வற்கும் ஏதிலார்க்கும் தங்கட்கும் தம்கிளைஞர்
யாவர்க்கும் கேடு சூழார்.”

பொருள்

உடல் இன்பத்தை மற்றவர்க்கு விற்று, அதனால் வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை உழுகின்ற பொதுமகளிர், (பொருட் பெண்டிர்) கற்பில்லாத குலப் பெண்களை விட மிகவும் நல்லவர். ஏனென்றால் தம் கணவருக்கும், பிறருக்கும், தங்களுக்கும், தம் சுற்றத்தார்களுக்கும் கேடு செய்யப் பொது மகளிர் எண்ணுவதி ல்லை.

கருத்து

கற்பில்லாத குலமகளை விடப் பொதுமகளிர் நனி நல்லவர்ஆவர்.

அருஞ்சொற்பொருள்

கற்பில் மகளின் - கற்பில்லாத குலமகளைக் காட்டிலும், நலம் - உடல்நலம், உணவுகொளும் - உண்ணுகின்ற வாழ்க்கை, பொற்றொடி நல்லார் - பொதுமகளிர், ஏதிலர் - மற்றவர் கிளைஞர் - சுற்றத்தார், கேடு - கெடுதல்கள், சூழார் - செய்ய மாட்டார்.

83

“முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்
நிறையும் நெடுநாணும் பேணார் - பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக்கு உண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு”

பொருள்

கற்பில்லாத மகளிர் தமக்கும் பிறருக்கும் உள்ள உறவு முறை, குடிப்பிறப்பு, தகுதி ஆகியவற்றை எண்ணிப் பார்க்க மாட்டார்கள். தனது உள்ளம் தீயவழியில் செல்லாமல் தடுத்து நிறுத்தும் நிறையையும், நாணத்தையும் காக்க மாட்டார்கள். இத்தகைய குணங்களைத் தவிர வேறு நற்குணம் உண்டோ? இல்லை. எனவே கற்பில்லாத மகளிரின் பிறப்பு பெரும் பாவமாகும்.

கருத்து

கற்பில்லாது வாழும் மகளிரின் பிறப்பே பெரும் பாவத்திற்கு உரியதாகும்.

அருஞ்சொற்பொருள்

முறை - உறவு, குடிமை - குடிப்பிறப்பு, பான்மை - வருணத்தின் தன்மை (சாதி), நிறை, நாணம் - இவை பெண்களின் பண்புகள், பெற்றிமை - தன்மை (குணம்)

84

“பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார்.”

பொருள்

ஐந்து புலன்களுக்கும் பகைமையான துறவியார் பெண்மையை வியந்து பேசமாட்டார்கள். பெண்களின் பெயர்களைக் கூறமாட்டார்கள். நெஞ்சில் பதிந்து கொள்ளும் வண்ணம் பெண்களைப் பார்க்கமாட்டார்கள். பெண்கள் பாடும் இசையைக் கேட்க மாட்டார்கள். பண்பில்லாத பெண்களைப் பாராட்ட மாட்டார்கள்.

கருத்து

துறவியார் சிற்றின்பத்திற்குரிய பெண்களை எவ்விதத்திலும் நாட மாட்டார் கள்.

அருஞ்சொற்பொருள்

வியவார் - வியந்து பேசார், பெயரும் எடுத்தோதார் - பெண்களின் பெயர்களைக் கூறமாட்டார்கள், நெஞ்சு உறைப்ப - நெஞ்சில் பதியும் வண்ணம், நோக்குறார் - நோக்க மாட்டார்கள், செவிமடார் - கேட்கமாட்டார்கள், வீடுஇல் - விடமுடியாத, புலப்பகை - ஐந்து புலன்களுக்குப் பகையானவர். (துறவியர்)

85

"துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம்
அயில் சுவையின் ஆகுவவென் றெண்ணி - அயிற்சுவையும்
பித்துணாக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துணா மொய்ம்பி னவர்"

பொருள்

புலன்களால் துன்பமடையாத தவமுடையவர்கள் உறக்கத்தின் இன்பமும், தரய பெண்களின் தோள்களைத் தழுவும் இன்பமும், உண்ணும் உணவினால் வருபவை என்று எண்ணி, அதிகம் உண்ணாது, பித்தர்கள் போல உணவினை உண் ணுவார்கள். (பித்தர் சுவை அறியாது சிறிதே உண்பார்கள்):

கருத்து

தவமுடையவர் மிகுந்த உணவு கேடுதரும் என்பதால் குறைவாகவே உண்பர்.

அருஞ்சொற்பொருள்

துகில்சுவை - தூக்கத்தின் இன்பம், தோட்சுவை - காம இன்பம், அயிற்சுவை - உண்ணும் உணவின் இன்பம், பித்துணாக் கொள்ப போல் - பித்துப் பிடித்தவர் சுவை அறியாது உண்பது போல், மொத்துணா - மிகுதியாக உண்ணமாட்டாாகள்.

86

"அன்பொ டருளுடைய ரேனும் உயிர் நிலைமற்று
என்பியக்கம் கண்டும் புறந்தரார் - புன்புலால்
பொய்க்குடில் ஓம்புவரோ போதத்தால் தாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்"

பொருள்

துறவியார் அன்பு, அருள் உடையவர்கள் என்றாலும் உயிருக்கு நிலைக் களனாக இருக்கும் உடலானது, உணவு அதிகம் இல்லாததால் மெலிந்து எலும்புகள் வெளியில் தோன்றுவதைக் கண்டும், உடம்பைப் பேண மாட்டார்கள். மேலும் ஞானத்தினால் வேயப்பட்ட குடிலாகிய முத்தியில் புக எண்ணுகின்ற அவர்கள், புன்புலால் யாக்கையாகிய உடம்பைப் பேண மாட்டார்கள்.

கருத்து

துறவியர் தம் உடலைப் பாதுகாப்பதில் அதிகக் கவனம் செலுத்த மாட்டார்கள்.

அருஞ்சொற்பொருள்

உயிர்நிலை - உயிர்தங்கும் உடம்பு, என்பியக்கம் - எலும்பு வெளியில் தெரிகின்றமை, புறந்தரார் - பேணமாட்டார், புன்புலால் - ஊண் உண்ணுகிறவரும் விரும்பாத மனிதஉடல், பொய்க்குடில் - உடம்பு, போதம் - ஞானம், புக்கில் - முத்தியாகிய பேறு.

87

"சிற்றின்பம் சின்னீர் தாயினும் அஃதுற்றார்
மற்றின்பம் யாவையும் கைவிடுப - முற்றும்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில்."

பொருள்

உடல் உறவால் பெரும் சிற்றின்பம் சிறிது நேரமே நிற்கும் இயல்புடையது. அந்த இன்பத்திற்கு ஆட்பட்டவர்கள் மற்ற எல்லா இன்பத்தையும் கைவிட்டு விடுவர்.

காலம் முழுவதும் பேரின்பம் என்னும் கடலில் மூழ்குபவர் உலக இன்பம் என்னும் சேற்றில் வீழ்வார்களோ? (வீழமாட்டார்கள்)

கருத்து

சான்றோர் பேரின்பத்தை விரும்புவர் அன்றிச் சிற்றின்பத்தை விரும்பார்.

அருஞ்சொற்பொருள்

சின்னீரதாயுனும் - சிறிது காலமே நிற்கும், முற்றும் - காலம் முழுவதும், பாரின்பம் - உலக வாழ்வு இன்பம், கும்பி - சேறு.

88

"எவ்வினைய ரேனும் இணைவிழைச்சொன் றில்லெனில்
தெவ்வும் திசைநோக்கிக் கைதொழூஉம் - அவ்வினை
காத்த லிலரேல் எனைத்துணைய ராயினும்
தூர்த்தரும் தூர்ப்பார் அலர்."

பொருள்

துறவியர் எத்தகைய தீவினை உடையவராக இருந்தாலும், பெண் இன்ப வேட்கை என்ற ஒன்று இல்லை யானால், அவர்களின் பகைவர்களும் அவர்கள் இருக்கும் திசைநோக்கி கைகூப்பி வணங்குவர். காமம் என்ற அந்தத் தீய செயலைக் காக்கவில்லை என்றால், எத்தகைய செயலைத் துறவியர் உடையவராக இருந்தாலும் காமுகர்கள் கூட அவர்களைப் பழித்துப் பேசுவர்.

கருத்து

துறவியர்க்குக் காம இன்பம் இல்லாது அறங்களைச் செய்வதே பெருமை தரும்.

அருஞ்சொற் பொருள்

வினை - அறச்செயல், இணைவிழைச்சு - காமப்புணர்ச்சி, கை தொழூஉம் - கைகூப்பித் தொழுவர், தூர்த்தர் - காமம் மிக்கவர், தூர்ப்பார் - பழிசொல்லுவர்.

89

"பரபரப்பி னோடே பலபல செய்தாங்கு
இரவுபகல் பாழுக் கிறைப்ப - ஒருவாற்றான்
நல்லாற்றில் நூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றான் உய்வார் இவர்."

பொருள்

உலகில் வாழும் பலர் பற்பல செயல்களை விரைவாகப் பாழ்நிலத்திற்கு நீர் இறைப்பதுபோல் பயனற்றுச் செய்து, இரவையும் பகலையும் வீணாகக் கழிப்பர். ஒரு வகையால் அறிவுடையவர்கள் அவர்களை நல்வழியில் செலுத்த முயன்றால் அவ்வழியில் செல்வதற்கு அவர்கள் அஞ்சுவர். இத்தகைய நிலையை உடையவர் பிறவிக் கடலிலிருந்து எவ்வாறு தப்புவர்? (தப்ப மாட்டார்கள்)

கருத்து

வாழும் காலத்தைப் பயனில்லாது வீணாகக் கழிப்பவர்கள் பிறவிக் கடலிலிருந்து தப்ப மாட்டார்கள்.

அருஞ்சொற்பொருள்

பரபரப்பு - மிக்க விரைவு, பலபல - பல காரியங்களை, பாழுக்கிறைப்ப - பாழ்நிலத்திற்கு நீர் இறைப்பதுபோல் பயனற்ற தொழில்களைச் செய்பவர் நல்லாற்றில் - நல்வழியில், ஊக்கின் - செலுத்தினால், பதறிக் குலைகுலைப - அஞ்சி நடுங்குவர், எவ்வாற்றான் - எந்த வழியில்.

90

"இளையம் முதுதவம் ஆற்றுதும் நோற்றென்று
உளைவின்று கண்பாடும் ஊழே - விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேல் காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம்"

பொருள்

உலகில் சிலர் நாம் இப்பொழுது இளம் பருவத்தில் இருக்கின்றோம், முதுமைப் பருவத்தில் தவத்தைச் செய்வோம் என்று, இளமையில் விரதங்களை மேற்கொள்ளாது மனதில் கவலையின்றி உறங்கிக் காலத்தைக் கழிப்பது, அவர்கள் செய்த முன் தீவினைப் பயனே. இளமையிலேயே இறத்தல் இன்றித் தம் வாழ் நாளின் எல்லை நீண்டிருப்பதை அறிந்தால் அறிஞரும் இளமைப் பருவத்திலும் தாமதம் செய்யாமல் தவத்தைச் செய்வார்கள்.

கருத்து

பருவம், காலம் இவற்றை நோக்காது தவத்தைச் செய்தல் வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

இளையம் - இளைமைப் பருவத்தை உடையோர், முதுதவம் ஆற்றுது - முதிய பருவத்தில் தவத்தைச் செய்வோம், நோற்று - விரதம், உளைவின்று - மனதில் கவலையின்றி, கண்பாடும் - தூங்குதல், ஊழே - தீவினைப் பயனே, விளிவின்று - இளமையில் இறத்தல் இன்று, வரம்பு - எல்லை, காண்பரேல் - அறிந்தாரேல், காண் பாரும் - அவ்வாறு அறிந்தவராம் அறிஞரும், தாழாமே - காலந் தாழ்த்தாது.

91

"நல்லவை செய்யத் தொடங்கினும் நோனாமே
அல்லன அல்லவற்றில் கொண்டுய்க்கும் - எல்லி
வியனெறிச் செல்வாரை ஆறலைத்து உண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்"

பொருள்

நல்லவற்றைச் செய்யத் தொடங்கும் பொழுது, அதனைச் செய்ய விடாமல் ஒருவர் செய்த தீவினை அவரைத் தீயசெயலில் கொண்டு செலுத்தும். (அது எது போல என்றால்) இரவுப் பொழுதில் வழிச் செல்பவரின் பொருளைக் கவர்ந்து வாழ்வு நடத்துகின்ற திருடர்கள், பெருவழியில் செல்வோரைத் சிறுவழியில் செல்லுமாறு பிழையாகச் செலுத்தி வழிப்பறி செய்வார்கள் செயல் போன்றதாகும்.

கருத்து

ஒருவர் செய்த பண்டைத் தீவினை நல்வழியில் செயல்களைச் செய்யாது தடுக்கும். எனவே ஊழ்வினை வலிது.

அருஞ்சொற்பொருள்

நோனாமே - செய்வதைப் பொறாமல், அல்லன - செய்த பாவங்கள், அல்லவற்றின் - தீய வழியில், எல்லி - இரவு, வியன்நெறி - பெருவழி, ஆறலைத்து - வழிப்பறி செய்து, செலவு பிழைத்து - செல்லும் வழியைத் தவறச் செய்து (சிறுவழியில் செலுத்தி)

92

"நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவபோர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே - கஞ்சுகம்
எப்புலமும் காவாமே மெய்ப்புலம் காக்குமற்ற
இப்புலமும் காவா திது."

பொருள்

தம் நெஞ்சம் தம் வயப்படாமல் புறத்தே செல்ல வாழும் துறவியர்க்கு, தாங்கள் மேற்கொண்டிருக்கும் தவ வேடமாகிய போர்வை, சட்டையாகாது. (பாதுகாப்பாகாது) ஏனென்றால் மனிதர் அணியும் சட்டைகள் எல்லாம் அவர்களின் உறுப்புக்ளை முழுமையாகக் காக்கவில்லை என்றாலும், உடலை வெயில், பனி முதலியவற்றிலிருந்து காக்கும். ஆனால் தவ வேடமாகிய போர்வை அதனையும் காவாது.

கருத்து

ஐந்து புலன்களையும் கட்டுப்படுத்தாது புறத்தே செல்ல விடும் துறவியர்க்குத் தவவேடம் காப்பாகாது:

அருஞ்சொற்பொருள்

நெஞ்சு புறம்பா - நெஞ்சு புறத்தே செல்ல, தவப்போர்வை - தவமாகிய வேடம், கஞ்சுகம் - சட்டை, எப்புலமும் - எந்தப் புலன்களும் (உறுப்புக்கள்), மெய்ப்புலம் - உடம்பாகிய புலன்.

93

**“வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் - வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு.”**

பொருள்

பிறரை வஞ்சித்து ஒழுகும் அறிவற்றவர்களே, எல்லோரையும் வஞ்சித்து விட்டோம் என்று மகிழாதீர்கள். நீங்கள் பிறரை வஞ்சிப்பதை எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன் காணுகின்றான் என்று அஞ்சி உடல் நடுங்குவது அறிவுடைமையாகும்.

கருத்து

பிறர் அறியாது அவர்க்குச் செய்யும் வஞ்சனையில் மகிழும் அறிவற்றவர்கள், தாங்கள் செய்யும் வஞ்சனையை இறைவன் அறிவான் என்பதை உணரவேண்டும்.

அருஞ்சொற்பொருள்

வஞ்சித்து ஒழுகும் - பிறரை ஏமாற்றித் துன்புறுத்தும், மதியிலிகாள் - அறிவற்றவர்களே, மகிழன்மின் - மகிழாதீர்கள், எங்கும் எளன் ஒருவன் - எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுள், அங்கம் - உடல்.

94

"மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும் - கழிமுடைப்
புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்று தைக்கும் சேயார் முகத்து."

பொருள்

மறைந்து ஒருவர் செய்யும் தீய செயலால் ஏற்பட்ட பழி, இறைவனால் - பறை என்னும் கருவியை அடித்து, அறிவிப்பதைப் போன்று எங்கும் பரவும். (அது எதுபோல என்றால்) இழிந்த மாமிசத்தின் நாற்றம் மூடி வைத்தாலும் தொலைவில் உள்ளவரின் முகத்தில் கூடச் சென்று தாக்குவது போன்றதாகும்.

கருத்து

யாருக்கும் தெரியாது என்று செய்யும் தீய செயல்களின் பழி என்றாவது ஒரு நாள் தெரியும்படி பரவிவிடும்.

அருஞ்சொற்பொருள்

மறைவழிப் பட்ட பழிமொழி - மறைவான இடத்தின்கண் உண்டாகிய பழி, பறை அறைந்தாங்கு - பறை அடித்தது போல, பரக்கும் - பரவும், கழிமுடை - மிகுதியாக வீசும், புன்புலால் நாற்றம் - மாமிசத்தின் நாற்றம், புறம்பொதிந்து - வெளியில் தெரியாமல், சேயார் - தூரத்தில்.

95

"மெலியார் விழினும் ஒருவாற்றான் உய்ப
வலியார் மற்றொன்றானும் உய்யார் - நிலைதப்பி
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமால் உய்யா பிற."

பொருள்

அறிவுக் குறையுடையோர் தன்னிலை தவறினாலும் ஒரு வழியில் பிழைத்து கொள்வர். ஆனால் அறிவு நிறைந்தவர்கள் (சான்றோர்) தன்நிலை தவறினால் எந்த வகையிலும் பிழைக்க மாட்டார்கள். (எது போல என்றால்) கனமில்லாத பொருள்கள் சீக்கிரத்தில் நிலை குலைந்து வீழமாட்டாது. அவ்வாறு வீழ்ந்தாலும் சிதைவடையாது. ஆனால் கனமான பொருள்களோ நிலைதவறி விழுந்தால் அவை சிதையாமல் இருப்பதில்லை.

கருத்து

சான்றோர் தன்நிலை தவறக் கூடாது.

அருஞ்சொற்பொருள்

மெலியார் - அறிவில் மெலிந்தவர், உய்ய - தப்புவார், ஒன்றானும் - ஒருவழியானும், நொய்ய - கனத்தில் குறைந்த பொருள், சழக்கென - விரைவாக, உய்யும் - பிழைக்கும், பிற - கனமுள்ளவை.

96

"இசையாத போலினும் மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால் - பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கம் காண்பாரை ஒப்பவே
ஊனோம்பி ஊன்றின் பவர்"

பொருள்

மேன்மக்களின் செயலானது சில வேளைகளில் பொருத்தமற்றவை போல் அறிவில் குறையுடையவர்களுக்குத் தெரிந்தாலும், மற்றவர்களுக்கு அது குற்றமாகத் தெரியாது. (அது எதுபோல என்றால்) உலக நலத்தை எண்ணிப் பசுவை வேள்விக்குரிய அவிப்பலி பொருளாகப் படைத்து, வேள்வியைச் செய்து மழை பெய்தவனைப் பயனகாக் கொள்ளும் வேள்வி செய்பவரைத் தம் உடலைப் பாதுகாக்க மாமிசத்தைத் தின்பவர் ஒப்பு ஆவாரோ. ஆகமாட்டார்.

கருத்து

வேள்விக்காகப் பசுக்கொலை செய்தாலும் அது தவறில்லை. உண்பதற்காகப் பசுக்கொலை செய்வது தவறாகும். முன்னது உலகிற்கு மழைப் பயனைத் தரும். பின்னதோ தின்பவர் உடம்பிற்கே உரியது.

அருஞ்சொற்பொருள்

இசையாத - பொருந்தாத, மேலையோர் - மேன்மக்கள், மற்றையோர்க்கு - அறிவுக்குறைவு இல்லாதவர்க்கு, வசையாகா - குற்றமாகா, பசுவேட்டு - பசுவை அவிப்பலியாக்கி, தீயோம்பி - வேள்வி செய்து, வான்வழங்க - மழைப்பயன் தர, ஊன்ஓம்பி - மாமிசத்தை விரும்பி.

97

"எவரெவர் எத்திறத்தார் அத்திறத்த ராய்நின்று
அவரவர்க் காவன கூறி - எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென."

பொருள்

எவரெவர் எத்தகைய தன்மையில் இருக்கின்றார்களோ, அவரவர் தன்மைக்கு ஏற்ப அறிவுரை கூறி, அவர்களை நன்னறிப் படுத்தித் தாங்கள் எதிலும் பற்றில்லாது வாழுகின்றவர் ஞானாசிரியர். அவர்கள் (ஞானாசிரியர்) எல்லாப் பொருள்களுக்கும் மேம்பட்டதாய், எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கன்றதாய் இருக்கின்ற இறைவ னைப் போன்றன ஆவர்.

கருத்து

பிறரை நெறிப்படுத்தும் சான்றோர் (ஞானாசிரியர்) இறைவனுக்குச் சமமான வர் ஆவா.

அருஞ்சொற்பொருள்

எவரெவர் - தம் மாணவர்களில் எவர், ஆவன - வாழ்விற்கு உரிய நெறி, உப்பாலாய் - மேம்பட்டவராய், எம்முடையார் - ஞானாசிரியர், தம்முடையான் - இறைவன், எப்பாலும் - எவ்விடத்திலும்.

98

"மெய்யுணர்ந்தார் பொய்ம்மேல் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணாப் புலம்காப்பார் - மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாணல் நீள்கதவாச்
சேப்பார் நிறைத்தாழ் செறித்து."

பொருள்

மெய்ப்பொருளை உணர்ந்த ஞானாசிரியர்கள் நிலையில்லாத பொருள்களிடத்தில் தம் ஐம்புலன்களைச் செலுத்தமாட்டார்கள், தமக்கு ஞானம் கிடைக்க வேண்டும் என்ற கருத்தில் ஐம்புலன்களை அடக்கிக் காப்பர். அவ் ஐம்புலன்களையும் காப்பதை வாயில் நிலையாகவும், பழிச் சொற்களுக்கு நாணுவதைக் கதவுகளாகவும் கொண்டு, நிறை எனும் தாழ்ப்பாளைக் கொண்டு இறுக்கமாகச் சாத்துவர்.

கருத்து

ஞானாசிரியர்கள் ஐம்புலன்களை அடக்கி வாழ்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

மெய்யுணர்ந்தார் - உண்மைப் பொருளாம் ஞானத்தை உணர்ந்தவர், பொய் மேல் - நிலையாமைப் பொருள் மேல், மெய்யுணர்ச்சி - ஞானம், நிலை - வாயில் கதவு பொருத்தப்படும் நிலைப்பகுதி, சீள்கதவம் - நீண்டகதவு, நிறை - மனதை ஒருவழிப்படுத்தும் நிலை, தாழ்செறித்து - தாழப்பாளைப் பொருத்தி, சேப்பரர் - சாத்துவர்.

99

“கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல் - முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம்
இறந்தவெலாம் துன்பமலாது இல்.”

பொருள்

கற்க வேண்டியவற்றைக் கற்று அதற்கு ஏற்ப வாழும் கணவனுக்கு மனைவி பெற்றுக் கொடுத்த முதல் மகனைப் போல், முற்றும் துறந்தவர்க்கு ஞானத்தில் உண்டாகும் இன்பமே பேரின்பம் ஆகும். மற்றவை எல்லாம் அவர்களுக்கு இன்பம் ஆகாது துன்பமே ஆகும்.

கருத்து

மெய்யுணர்ந்தார்க்குக் கிடைக்கும் இறைஞானமே பேரின்பமாகும்.

அருஞ்சொற்பொருள்

கற்றுத் துறைபோய - கல்வித்துறையில் முதிர்ந்த, மெய்யுணர்வில் - மெய்ப்பொருளை உணர்ந்த ஞானத்தில், இறந்தவெலாம் - மற்றவை எல்லாம்.

100

“கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனம்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்நது
நிற்பாரே நீணெறிச்சென் றார்,”

பொருள்

நூல்களைக் கற்றபடி உணர்ந்து அவற்றிற்கு ஏற்ப அடங்கி, தீயவற்றை விலக்கி, நல்லனவற்றைச் செய்து, கிடைத்ததைக் கொண்டு, (மகிழ்ந்து) மனதை ஒருமைப்படுத்தி, பற்ற வேண்டிய இறைவனைப் பற்றி, எல்லாச் செயலும் அடங்கும் படி நின்று, மெய்ப் பொருளை உணர்ந்து வாழும் ஞானியரே வீட்டுநெறியாகிய முத்தியை அடைவர்.

கருத்து

வாழ்வாங்கு வாழ்ந்தாரே முத்தியை அடைய முடியும்.

அருஞ்சொற்பொருள்

கற்றாங்கு - நூல்களைக் கற்றபடி, தீதுஓரீஇ - தீயவற்றை விலக்கி, நன்றாற்றி - நல்வழியில், திருத்தி - ஒருமைப் படுத்தி, பற்றுவதே பற்றி - பரம்பொருளைப் பற்றி, நீள்நெறி - வீட்டுப்பேறு.

101

“ஐயந்திரிபின் றளந்து உத்தியில்தெ ளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்”

பொருள்

ஐயமில்லாமல் ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளாமல், காட்சி முதலிய அளவைகளால் அறிந்து, சத்திய ஞானமாகிய கண்விழித்து, ஞான உறக்கம் கொள்கி ன்றவர்கள், தம் உள்ளத்தில் காணும் காட்சியே இறைக்காட்சியாகும். அந்த ஞான உறக்கத்தில் காணும் காட்சியை நினைவில் அடைவதே முத்திப் பேறாகும்.

கருத்து

ஞான நிலையே முத்தியைத் தரும்.

அருஞ்சொற்பொருள்

அளந்து - காட்சிமுதலிய அளவைகளால் அளந்து, உத்தியிற் தெளிந்து - அறிவினால் தெளிந்து, கண்விழிப்ப - சத்தியக் கண் வீழிப்ப, தீர்ந்த பொருள் - முடிந்த பொருள் (முத்தி).